[illegible]

[illegible] 7 [illegible]

March 1934


3L

ணு211, N27 S4

N34·7·8.

186937

475 No. M. 2302. 475 8

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1935

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § ஸ்ரீமுக—பங்குனி: 1934—மார்ச்சு § திங்கள் அ.


| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | தமிழ் நூல்களின் தகைமை | 161 |
| உ. | சென்னை மாகாணத் தமிழர் மாநாடு | 164 |
| ங. | சிவோபாஸனை | 165 |
| ச. | தமிழ்மொழியின் தனிமைத் தன்மை | 166 |
| ரு. | காந்திக்குப் பணம் எதற்கு? | 167 |
| சு. | காந்திக்குச் சம்பந்தம் உண்டா? | 170 |
| எ. | காந்தியே! ஏமாற வேண்டாம் | 172 |
| அ. | செவிலி ஈந்தொடு வினையது | 173 |
| கூ. | கரும சண்டாளர் | 178 |
| ய. | சிவஞான சுவாமிகள் திருவுள்ளம் | 179 |
| யக. | ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்மீது சரமகவி | ,, |
| யஉ. | தீர்மானங்கள் | 181 |
| யங. | காந்தியும் கணக்கப்பிள்ளையும் | 183 |
| யச. | காந்தியின் கபடநாடகத் தன்மை | 185 |
| யரு. | மதிப்புரை மஞ்சரி | 186 |
| யசு | பழமலைக் கோவை | (33—40) |


ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—குமார விநாயகர் திருக்கோயிலிலும், நகரச்சிவாலயத்திலும், மாசி கஉ மகா சிவராத்திரி வைபவமும், ௰எ குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜரபிடேகமும் நடைபெற்றன.

துன்றக்குடி:—கலியுகவரதராகிய கந்தக்கடவுள் திருவருளால் பாற்பசு பெற்ற வல்லநாடு பூவரசக்குடி மு. அ. இராமசாமி அம்பலம், மாசிமீ உகூ அபிடேகத்திற்குக் கலசத்திற்கொண்டுவந்த பாலை, மெய்காவற்காரனிடம் கொடுத்து, பதனமாக வைத்திருந்து அபிடேகத்திற்குக் கொடுக்கச் சொல்லியிருந்ததை, அக்காவலன் மலைக்கோயிலுள் ஒருபால்வைத்துவிட்டுத் தனது இல்லிற்சென் றுறங்குகையில் அவன் கனவில் முருகக் கடவுள் தோன்றி "பாலுக்குக் காவல் வைத்திருக்கிறேன்; போய்ப்பார்" என்று தெரிவித்தவாறே, குருக்கள் முதலானவர்களுடன் வந்துபார்க்க, படம் விரித்த கோலத்துடன் ஒருபெரிய சர்ப்பம் அப் பாற்கலசத்தைச் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டு, அதனைப் பூசித்தனுப்பிக் கடவுள் கனவிலருளிய திருவருட் காட்சியை வியந்து, பத்திரமாகக் காக்கப்பெற்றிருந்த பால் பயபக்தியுடன் அபிடேகிக்கப்பெற்றது. இதுவும் அறுமுகக்கடவுளின் அற்புதச் செயலேயாம்.

ஆத்தங்குடி:—சநாதன தர்ம சபை மாசி உ, ரு உகளில் ஸ்ரீபுரி ஜகந்நாதம் கோவர்த்தன பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளவர்களெழுந்தருளி, மகோபந்யாச உபதேசம் புரிய மகாவைபவமாகநடைபெற்றது. காந்திகஷியாரும் கண்டுகேட்டுத் திகைத்தனர். அன்பர்பலரும் கண்டுகேட்டு ஆனந்தித்தனர். கோநகர் மகாதேவ முருகப்ப செட்டியாரவர்களின் திருவளர் செல்வர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாராலும், சுவாமிகளுக்கு விஜய பஞ்சகம் சமர்ப்பிக்கப்பெற்றது.

கோவிலூர்:—ஸ்ரீசச்சிதானந்த சிவசொரூபமாய் விளங்கும் ஆதிகுருமூர்த்தியாகிய ஆண்டவர் என்னும் ஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் குருபூசை இம் மதி ௰எ நடைபெறும் என, ஷை மடாலயத்திலிருந்து திருமுகம் வழங்கப்பெற்றுள்ளது.

ஆவினிப்பட்டி:—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஏழாவதாண்டு ஒன்பதாவது மாதக்கூட்டம், அஞ்சல் நிலையத் தலைவர் மறைத் திருவாளர் வேங்கடராமையர் தலைமையில், மாசி எ நன்கு நடைபெற்றது. மாணவர் பண்சுமந்த பாடல்களுடன், முயற்சியின் முதன்மை—கிரௌஞ்சகிரியைப் பிளத்தல்—செல்வமும் நாடும்—கம்பர் பெருமை—தீர்க்காலோசனை—தமயந்தி—குருபக்தி—புத்திரர் கடமை—சரீரசௌக்கியம் ஆதியவைகளைப்பற்றி அறவுரை யாற்றினர்.

திருத் தென்குடித் திட்டை:—தைப்பூச உபயம் திரு. மருதமுத்து ஆசாரியாரின் குமாரர் திரு. ஐயாறு ஆசாரியாராலும், மாசி கஉ மகாசிவராத்திரி உபயம் திருவாளர்களான தேவகோட்டை ராம. அரு. அரு. ராம. அருணசலச் செட்டியா ரவர்களாலும், குளமங்கலம் மா. சாமியப்பா பிள்ளையவர்களாலும் மிகச் சிறப்பாகச் செய்யப்பெற்றன. மகாசிவராத்திரியில் திரு. வயி. ரெங்கசாமி பிள்ளை முதலாயினோரும் சர்க்கரைப் பொங்கலாதிய நிவேதித்து ஆராதித்தனர். ௰எ நடராஜர் அபிடேகம் கர்ணம் திரு. மு. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களாலும், மாசிமக உபயம் தஞ்சை கீழவாசல் திரு. வ. பெத்தபெருமாள் பிள்ளையவர்களாலும் இனிது நடைபெற்றன.

திருவெண்காடு:—ஸ்ரீபிரமவித்தியாம்பா சமேத சுவேதாரணியேசுவரருக்குத் தை-௰உ தொடங்கி மாசி உ வரை இந்திர விழா இனிது நடைபெற்றது.

MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—பங்குனி | திங்கள் அ. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## தமிழ் நூல்களின் தகைமை.

உலகில் வழங்கும் பிறமொழிகளிலுள்ள நூல்களைப்போ லன்றி நமது தமிழ்மொழி நூல்கள் பல இயல்வரம்புக் குட்படுத்து யாக்கப்பெறும் இயல்புடைய வாகும். நூல் ஒன்பது தமிழ்ச் சொல். பாவை போல்வாளைப் பாவை யென்றாற் போல நூல் போறலின் நூலென உவமை யாகுபெயராய்க் கற்குங் கலைகள் வழங்கப்பெறுகின்றன. உவமை யாமா றென்னையோ வெனின், அது நூற்றற்றொழின் முறையானும், செப்பஞ் செய்யுந் திறத்தானும் இருவகையாய் விரியும். அவைதாம், 'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉத் தனது செயற்கைநலந் தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூல்நூற்றல் என்பது.'; அவ்வாறே, சூந்து பரந்த சொற்பரவைகளாகிய பஞ்சி நுனிகளால், உணர்வு சான்ற புலவோர் வாயே கையாகவும், மதியே கதிராகவுங் கொண்டு படலம் இயல் சூத்திரம் என்னும் யாப்பு நடைபட இழைக்கும் பனுவலாலாதலும், காடு முருடாகிய மரத்தினது கோணலை நீக்கி யொழுங்கு படுத்தற்குதவுமாறு, மனிதர்களது மனத்தின் கோணலைப்போக்கி அறியாமையை நீக்கி அறிவை உண்டாக்கி மக்கட் பண்பை வளப்படுத்தும் மாட்சியுடைத் தாதலும் ஆகும். வடமொழியிலும் தந்திரம் என நூலை வழங்குதல், இப் பெயர்ப்பொருள் இனைய என்பதை வலியுறுத்தும். இது,

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத

கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு. ”

“உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு. ”

என்னும் நன்னூற்பாவைப் படியெடுத்துரைத்து விளக்கப்பெற்றது.

இத்திறத்து நூலின் இயல்பு, பொது சிறப்பு ஆகிய இருவகைப் பாயிரங்களை முன்னே யுடையதாய், எழுவகை மதந் தழீஇப் பத்து வழுவு மொரீஇப் பத்தழகு மரீஇ முப்பானிரண்டு உத்தி கொண்டு, இயல் படலம் என்னும் உறுப்புக்களால் யாக்கப்பெற்று உயிர்க்கு உறுதி பயக்கும் அறமாதிய நாற்பொருட் பயனுறும் நலப்பாடுடையதாகும்.

இவ்வியல்புடைய நூல்கள், முதனூல், வழிநூல், சார்புநூல் என மூவகையாகவும், அவை அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என நால்வகையாகவும் வழங்கப்பெறும். இன்னும், இவற்றை விதிநூல் துதிநூல் ஞானநூல் எனவும், அவற்றை யுணர்தற்குக் கருவியாய இலக்கணநூல் தருக்கநூல் எனவும் பல்வகைப் படுத்தோதுவர்.

இயல்பாகவே பாசங்களி நீங்கி விளங்கும் முற்றறிவுடைய முதல்வனாற் காணப்பட்டது முதனூல் எனவும், அவன் அருள் வழிப்பட்ட சான்றோர்கள் ஆக்கிய பிறவெல்லாம் வழிநூல் சார்பு நூல் எனவும் வழங்கப்பெறும்.

“அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே. ”

என்றோராகலின், உயிர்க்கு உறுதிபயக்கும் நாற்பொருளாகிய உள்ளீடற்றது நூலென நுவலப்படாது என்ப.

எனவே, அறம் ஆதிய நாற்பொருள்களையும் தொகை வகை விரியெனும் யாப்புறத் தலக்குவனவே முதனூல் முதலிய பலவுமாம்.

அறமாவது, அந்நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் ஆகிய ஒழுக்க நெறியாம். அந்நெறிகள், மக்களது பக்குவநோக்கிப் பொது சிறப்பு என இருவகைப் படுத்து விரித்து விளக்கப்பெற்றுள்ளன. எவ்வாறு ஒரு கல்லூரியிலுள்ள மாணவர்களைப் பலவகுப்புட் படுத்து, அவ்வவ் வகுப்புக் கேற்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றவோ, அவ்வாறே மக்களையும் அந்தணர் முதலிய நான்கு வகைப்படுத்து அவ்வவ் வருணத்துக் கேற்ற ஒழுகலாறுகளை முதனூல் முதலி[illegible]யாநின்றன. இதனுண்மை,

186937



“அருமறை நால்வே றுகையால் வருண மாச்சிர மங்களு நான்காம்
தருமம்யா காதி கருமமும் மறையின் றகைமையிற் றேன்றின மறையும்
கருமநூல் ஞான நூலென இரண்டாம் கருமநூ லிவனருச் சனைக்கு
வரும்வினையுணர்த் தும்ஞான நூலிவன் றன்வடிவிலாவடிவினையுணர்த் தும்.’

என்னும் பரஞ்சோதி முனிவர் பனுவலாற் றெள்ளிதி னுணரலாம். ஆகவே, நமது அருளன்னையாகிய ஔவைப்பிராட்டியார் அருளிய ஆத்திசூடி முதல் இறையனாரகப்பொருள், தொல்காப்பியம் இறுவாயுள்ள எந்தத் தமிழ்நூலும் சாதி சமய சம்பந்தமின்றி யியலக் கண்டிலம். இவ்வாறிருக்க:

“சாதி சமய வேற்றுமை யுணர்ச்சியை உண்டாக்கக் கூடிய நூல்களைக் கல்லூரிகளில் மாணவர்கட்குப் பாட புத்தகங்களாக நியமிக்கக் கூடாது”

என ஒரு தீர்மானம் நிறைவேறவும்,

“அறிவு வளர்ச்சிக் கென்று சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும் பள்ளித் தமிழ்ப் புத்தகங்களில், பகுத்தறிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் முரண்பட்ட கடவுள் வாழ்த்துப்பாக்கள், அல்லது கடவுளைப்பற்றிய குறிப்புகள் இருத்தல் கூடாது. ”

என ஒருதீர்மானங் கொண்டு வரவும், சென்னையிற் கூடிய தமிழன்பர் மகாநாட்டினர் இடங்கொடுத்தது ஒரு சிறிதும் பொருத்தமற்றதாகும்.

“தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப் பாகும். ”

என்னும் இயலைக் கடைப்பிடித்து, ஆசிரியர்கள் தாம் வழிபடு கடவுளை யாதல், எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் முதலில் வழிபட்டுக் கொண்ட பின்னரே, நூல் யாக்கத் தொடங்குதல் மரபாம். இதனை ஆத்திசூடி முதல் ஐம்பெருங் காப்பியம் இறுதியாக வுள்ள எந்நூலகத்துங் காணலாம். இனி, அவ்வந் நூல்களிலுள்ள கடவுளைப் பற்றிய பனுவல்களையும், சாதிசமயம் பற்றிய பாக்களையும் ஒழித்து நூலுருவைச் சிதைத்துப் புதுப்பிக்க வேண்டும்போலும். அவ்வாறாயின்,

“திருமாலுக் கடிமைசெய்; சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு; ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்; வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்” என்பன வாதியாகச் சிறுவர் பயிலுதற்குரிய நீதிநூல்கள் முதல் “அரச ரல்லா ஏனை யோர்க்கும், புரைவ தென்ப வோரிடத் தான; வேந்து வினை யியற்கை பார்ப்பார்க்கும் உரித்தே. ” என்னும் இறையனாரகப்பொருள், தொல்காப்பியம் வரையுள்ள நூல்களையெல்லாம் உருக்குலைக்க ஒருப்பட வேண்டுமன்றோ?

அவ்வாறுயின் தமிழ்மொழி உருப்படுமா? இவை யெல்லாம், தெய்வங் கொள்கையின்றிப் போலிச் சுயமரியாதை புகலும் சிலரது பிரேரணையால் நிகழ்ந்தனவேயாம்.

அருந்தமிழ் அன்பர்களே! மொழியுருவையும் நூன்மரபையும் ஆசிரியர் அமைப்பையும் ஆன்றோர் ஆசாரத்தையுஞ் சிதைக்கத்தக்க இத் தகைய தீய செயலில் நமது காலத்தைக் கழிக்கக் கருதாது, அறிவாற்றலும் அருந்தவவொழுக்கமும் அநுபவமும் முதிர்ந்த அருளாசிரியர்களின் ஆணைவழிக் கடங்கி, அவர்களாலாக்கப் பெற்றுள்ள அமிழ்தனைய தமிழ்நூல்களின் றகைமையை யுள்ளவாறுணர்ந்து, அவற்றைப் பொன்னேபோற் போற்றி,

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யப்பால்
உயர்ந்த வுலகம் புகும்."

என்னுந் திருவாக்குக் கிசையக் கற்பன கசடறக் கற்றுத் தேறி, அதற்குத் தக அறநெறியில் அமைந்து நடந்து, இம்மை மறுமை வீடு என்னும் மும்மைப் பயனையும் பெறுதற்கு முயறலே தமிழ்த் தாய் வயிற்றிற் பிறந்த நம்மனோர்க் கடுத்த செம்மை நலமாம் எனத் தெளிந்தொழுகுவோமாக!

---

## சென்னை மாகாணத் தமிழர் மாநாடு.

திருநெல்வேலியில், இம்மதி ௩௰, ௩௧, ௧௲ (1934—மார்ச்சு 30, 31; ஏப்ரல்—1) ஆம் நாட்களில், இருபெருந் திருவும் ஒருங் கமைந்த பெருமையாளர்களின் தலைமையிற் கூடும் இம்மாநாட்டின் நோக்கம் பலவும் சாலச் சிறந்தவே. தமிழ்ப்பெரு மக்கட்குக் காலத் தினாற் செய்த நன்றியெனக் கருதற்கிடனாய்க் காணப்பெறுகின்றது. சென்னையிற் கூடிய தமிழன்பர் மகாநாட்டைப்போல் தமிழ்மரபைத் தகர்க்குநெறி படராது, சாதிசமயாசாரங்களிற் றலையிடாது, தான் மேற்கொண்டுள்ள செந்தமிழ் வளர்க்குந் திருத்தொண்டிலேயே கண்ணுங் கருத்துங் கொண்டொழுகின், எண்ணிய எண்ணியாங் கெய்தப்பெற்று, எல்லா வளனும் தமிழ் மக்கட்கு அடைவிக்கும் ஏற்றமுடையதாய் இலங்குவதாகும். அவ்வாறே திருவருள் சுரக்கத் தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டிநாடே பழம்பதியாகக் கொண்டு விளங்கும் பரசிவனாரது பொன்னார் மலரடியைப் போற்றித் துதிக்கின்றோம்.

---

26 APR 1935
MADRAS

உ

# சிவோபாஸனை.

(ஸ்ரீகிருஷ்ணர் சொன்னது.)

(ஸ்ரீஉபய-வே-தி-ஈ-ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் மொழிபெயர்த்த அநுசாஸனபர்வம் * 49வது அத்யாயத் திரட்டு.)

சிவபரத்துவ நிரூபணசிகாமணி
பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்.

ஞானவான்களிற் சிறந்தவரான கிருஷ்ணபகவான் யுதிஷ்டிரருக்கு ஒரு சொல்லைச் சொல்லலானார்:—"சூரியனைப்போல விளங்கும் உபமன்யுரிஷி என்னிடத்தில், 'பாபகாரியம் செய்கிற எந்த மனிதர்கள் தங்கள் பாவங்களினால் மதிகலங்கி ராஜஸமும் தாமஸமும் மேற்கொண்டிருக்கின்றனரோ அவர்கள் ஈசுவரரை யடைவதில்லை. பரிசுத்த ஞானமுள்ள பிராம்மணர்கள் ஈசுவரரை யடைகின்றனர். பரமேசுவரரிடத்தில் பக்தியுள்ளவன் எவ்வகையாக நடந்தபோதிலும் காட்டில் வஸிக்கும் பரிசுத்தாத்மாக்களான முனிவருக்குச் சமமாவன். ருத்திரர் ஸந்தோஷமடைந்தால், பிரம்மாவாதலையும் விஷ்ணுவாதலையும் தேவருடன் சேர்ந்த இந்திரனாதலையும் மூன்று லோகங்களுக்கும் ஈசுவரனாதலையும் கொடுப்பார். அன்புள்ளவரே! மனத்தினாலாவது சிவனைச்சரணமடையும் மனிதர்கள் எல்லாப் பாவங்களையும் நீக்கித் தேவர்களுடன் வஸிப்பர். குளம் ஆறு முதலியவற்றின் கரைகளைப் பலமுறையிடித்தும் இவ் வுலகமனைத்தையும் தீயிற்போட்டிருப்பவனும் ஈசுவரரைப் பூஜிப்பானாயின் அவனை அப்பாவம் பற்றாது. எல்லா நற்குணங்களுங்குன்றி எல்லாப் பாவங்களோடும் சேர்ந்திருந்தாலும் சிவனை மனத்தினால் தியானிப்பவன் அந்தப்பாவங்களனைத்தையும் ஓட்டிவிடுகிறான். கிருஷ்ண! மகாதேவரைச் சரணமாக அடைந்த புழு பக்ஷி விட்டில் மிருகங்கள் இவற்றிற்குக்கூட எங்கும் பயம் இராது. அப்படியே பூமியில் சிவபக்தியுள்ள மனிதர்கள் ஸம்ஸாரத்திற் குட்பட மாட்டார்களென்பது எனது உறுதியான எண்ணம்' என்று சொன்னார்" என்று கூறினர். கிருஷ்ணன் மறுபடியும் யுதிஷ்டிரரைப்பார்த்துச் சொல்லலானார்.— "தர்மராஜரே! சூரியன், சந்திரன், காற்று, அக்நி, ஆகாயம், பூமி, ஜலம், வஸுக்கள், விச்வதேவர்கள், தாதா, அர்யமா, சுக்கிரர், ப்ருகஸ்பதி, ருத்ரர்கள், ஸாத்யர்கள், வருணன், பிரம்மா, இந்திரன், பிரம்மாண்டம், ஸத்யலோகம், வேதங்கள், யஜ்ஞங்கள், தக்ஷிணைகள், வேதங்களைப் பிரவிருத்திக்கச் செய்தவர்கள், ஸோமலதை, யாகம் செய்பவன், ஹோமம் செய்யப்படும் நெய்முதலியவை, யஜ்ஞத்தின் ரக்ஷணம், யாகதீக்ஷைகள், நியமங்கள், ஸ்வாஹாகாரம், வௌஷட்காரம், பிராம்மணர்கள், பசு, முக்கியமானதர்மம், காலசக்ரம், பலம், புகழ், இந்திரியஜயம், புத்தியுள்ளவர்களா யிருத்தல், நன்மை, தீமை, ஸப்தரிஷிகள், புத்தி, சந்தனம், புஷ்பம், செய்கருமங்கள் கூடிவருதல், ஊஷ்மபர் ஸோமபர் லேகர் ஸுயாமர் துஷிதர் பிரம்மஸகாயர் ஆபாஸுரர் கந்தபர் தூமபர் வாசாவிருத்தர் மனோவிருத்தர் சுத்தர் நிர்மாணரதர் ஸ்பர்சாசனர் தர்சபர் ஆஜ்யபர் சிந்த்யத்யோதர் என்னும் தேவக்கூட்டங்கள், மற்றுமுள்ள முக்கியமான தேவதைகள், கருடர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், சாரணர்கள், நாகர்கள், ஸ்தூலம்,

ஸூக்ஷ்மம், நடுத்தரமானது, மிருது, கடினம், ஸுகதுக்கங்கள், ஸாங்கியம், யோகம், அவற்றைச் செய்பவரடையுங் கதி ஆகிய நாம் சொல்லிய இவையனைத்தும் சிவனிடத்திலிருந்து உண்டானவை யென்றறியும். எல்லாவற்றினும் பெரிதான அந்த ஒரு பொருளைத் தவத்தினால் த்யானம் செய்து ஆத்மாவுக்காக நான் நமஸ்கரிக்கிறேன். . ஸமர்த்தரும் என்று மழியாதவருமாகிய அந்த ஈசுவரர் என்னால் துதிக்கப்பட்டு வேண்டியவரங்களைக் கொடுக்கக் கடவர். பாரதரே! இவ்வாறு (ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லித்) துதிக்கும் மனிதன் தன்தேகத்தில் எத்தனைமயிர்க்கால்கள் இருக்கின்றனவோ அத்தனையாயிரம் வருஷங்கள் ஸ்வர்க்கத்தில் வஸிப்பான்" என்று சொன்னார்.

---

## தமிழ்மொழியின் தனிமைத் தன்மை.

[ * முற்றிங்கள் 144--ஆம் பக்கத்து அடிக்குறிப்பிற் சுட்டிய சரிதம். ]

முன்னொருகாலத்தில் ஸ்ரீ காசியம் பதியிலே வடமொழிக் கடலை நிலை கண்டுணர்ந்த மகாபண்டிதர் ஒருவர், "உலகத்தில் எம்மொழிக்கும் ஆரியமே பிறப்பிடம்; ஆதலின், எம் மொழியையும் அவற்றின் ஒலியியல் குன்றாது எமது வடமொழியில் எழுதிக் காட்டுவோம்." என்னுந் தருக்குடையராய், பல மொழியையும் அவ்வாறே வடமொழியி லெழுதிக் காட்டி வெற்றிக்கொடி நாட்டி விளங்கிக்கொண் டிருக்கையில், தமிழ் நாட்டிலிருந்து கங்கைநீ ராடற்கு ஆங்கணைந்த தமிழ்மறை யோதுவார் ஒருவர், "தமிழ் தனிமொழி யென்பாரன்றே; அவ்வாறாக இவ்வடமொழிவாணர் இவ்வாறு மேற்கோட லேலுமோ?" என எண்ணி, அப் பண்டிதரை யணுகி "ஐயரே! என் தாய்மொழியிலுள்ள ஒரு பாசுரத்தைப் பாடுகிறேன்; ஒலிவழுவாது அதனைத் தங்கள் மொழியில் எழுதிக் காட்டுங்கள்." எனக் கூறி,

"ஒழுகலரி தழிகலியி லுழியுலகு
பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க ளழுவுமுனி
குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை
கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன்
வழிமொழிகண் மொழிதகையவே."

எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய வழிமொழித் திருவிராகத் திருக்கடைக்காப்பை ஒருமுறை இருமுறை மும்முறை இசையுடன் ஓதினார். அதனைக் கூர்ந்து கேட்ட அப் பண்டிதர் அவ் வருட்பாவை எழுத வியலாது மனந்தளர்ந்து, "ழகர எழுத்துப்பேறு உடைமையாலன்றோ அது தனித்தமிழ் எனத் தலைமைபெற்று விளங்கலாயிற்று" என்று கூறி விடுத்து, அன்றுமுதல் தம் அகந்தை யொழிந்தன ரென்பர். இதனால், ழகர வொலி தமிழுக்கே சிறப்பா யிருத்தல் பெறப்பட்டமை தெளிக.

---

௭

# காந்திக்குப் பணம் எதற்கு?

(ஒரு பண்டிதன்.)

இப்பொழுது காந்தி சம்பாதிக்கும் பணம் எங்குப் போய்ச் சேருகிறது? யாரிடம் கணக்கு? இந்தப்பணம் எந்தக்காரியத்தில் உபயோகப்படுகிறது? என்பன போன்ற விஷயங்களை நேரிலும் உண்மையாகவும் அறிந்தவர் ஒருசமயம் ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம். அவரும் காந்தியின் அந்தரங்க சிஷ்யராகவே இருப்பார்.

### கணக்குக் கேட்டால் கோபமே:

சுயராச்சியம் பத்துமாதத்தில் வாங்கித்தருவதாகச் சொல்லி அதன் விலையாகப் பெற்ற ஒரு கோடி (10000000) ரூபாய் எங்கே? தரித்திரநாராயணன் பெயரைக்கூறிப் பெற்றுக்கொண்ட பத்து லக்ஷக்கணக்கான பணம் எங்கே? தகப்பனாரின் வழியை அநுசரித்துத் தேவ்தாஸ் காந்தி சம்பாதித்த பணம் எங்கே? இவையெல்லாம் எங்குபோயிற்று? போன, போகிற, போகப்போகிற வழியை உண்மையாய்க் காந்திதான் அறிவாரோ? ஸி. ஆர். ஆசாரியார், பிர்லா முதலிய தேசோத்தாரக மஹாநுபாவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும். இதைப்பற்றி எவனாவது கேட்டாலும், எழுதினாலும், போதும்! போதும்! அவன்பாடு திண்டாட்டந்தான். இந்தப் பணங்களால் பிழைக்கும் பலரும் நொண்டி சமாதானம் எழுதவும், கேட்டவனைத் திட்டவும் கிளம்பிவிடுவார்கள். மனச்சாட்சி என்பதைப் பல தலமுறையாக அறியாத சில போலித் தேசீயப் பத்திரிகைகளும் உரக்கக் கூச்சல் போடத் தொடங்கிவிடும். காந்தி அதைச் செய்தார், இதைச்செய்தார் என்று உடனே அடுக்கக் கிளம்பிவிடும். இந்தமாதிரி சம்பாதித்த பணத்தை உபயோகித்து வந்த சில மஹா தேசாபிமானிகள், காந்திக்கூட்டத்தார் கொடுத்த பணத்துக்குக் கணக்குக் கேட்டதும் வக்கரித்து வேறு சங்கம் கூட்டக்கிளம்பியதும், காந்தி வகையராவை உண்மையைச் சொல்லித் தூற்றத் தொடங்கியதும் யாருமறிந்த ரகசியமல்லவா? காந்தி புறப்பட்டால் பணம், பேசினால் பணம், ஒரு ஊருக்கு வருவதானால் பணம், நின்றால் பணம், இருந்தால் பணம், மூச்சு விட்டால் பணம். ஐயோ! பாரதநாடே! உனது ஏழ்மை நிலைமையில் இவ்வாறு பணத்தைப்பறித்து ஒருவரிடம் குவித்துவைப்பது உனக்கு உசிதமா? நியாயமா? தர்மமா? அகராதியில் காந்தி என்ற பதத்திற்கு 'பண சம்பாதனம்' என்றபொருள் எழுதும் காலம் மிகவும் நெருங்கி வருகின்றது.

### பணம் போகும் போக்கு:

இந்தப் பெரும் வசூலில் ஒரு பாகத்தைக் கொண்டே எவ்வளவோ லோகோபகாரமான காரியங்களைச் செய்திருக்கலாமே? ஆயிரக்கணக்கான ஏழைமக்களையும் தாழ்ந்தவகுப்பு சனங்களையும் கைதூக்கி விட்டிருக்கலாமே? ஏதாவதொன்று நடந்திருக்கிறதா? ஊரூராகச் செல்வதிலும் சட்டசபையை நாடுவதிலும், வாலிபர்களை மயக்கிச் சட்டமறுப்பு முதலிய தீச்செயலிலிறக்குவதிலும், வாயாடி மனிதர்களையும் பத்திரிகைகளையும் திருப்

திப்படுத்தி வசமாக்குவதிலும், அண்டின குடும்பங்களை மஹாராஜ முறையில் வாழ்விப்பதிலும், இந்தப்பணமெல்லாம் உபயோகப்படுவதை வாயில்லாப்பூச்சிகளான பணம் கொடுத்த பாரத சாதுசனங்களும் அரசாங்கத்தாரும் பொறுத்துக்கொண்டிருந்தாலும் தெய்வம் நீண்டகாலம் பொறுத்திருக்கமாட்டாது.

காந்தி ஏதோ லோகோபகாரம் செய்துவிட்டதாகப் பறை சாற்றும் அவருடைய சிஷ்யர்களும் தொண்டர்களும் உண்மையில் இவ்வாறு நம்புகிறதாக எனக்குத் தோன்றவில்லை. இவர்கள் மூடர்களல்ல. பலவிதத்திலும் கட்டுப்பட்டிருப்பதால் அவர்கள் ஒன்றை ஆயிரமாகக் கூறவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இப்போது காந்தி பணம் சம்பாதிக்கக் கையாளும் தந்திரத்தை நம் பாரதமக்கள் அறியாததும், அறிந்தும் பேசாமலிருப்பதும் அநியாயம்! ஆச்சரியம்! இந்த சம்பாத்தியம் வாஸ்தவத்தில் ஹரிஜனங்களுக்கு உபகாரம் செய்யவா? இல்லவே யில்லை. காங்கிரஸ் பெயரைச் சொல்லிப் பணம்பறித்தால் அதனை ராசாங்கத்தார் பறிமுதல் செய்துவிடுவார்கள். இதற்காக எடுத்துக்கொண்ட தந்திரமல்லவோ இந்த அரிசன இயக்கம்?

## பூகம்பம் எதனால்?

எப்பொழுதும் செய்யும் பணசம்பாத்தியத்துக்கு இப்பொழுது ஒரு உபாயமாகக் காந்தி எடுத்துக்கொண்ட அரிசன இயக்கம் உண்மையில் அதர்மப் பிரசாரமாகையால், இதனைச்சகியாத தெய்வம் காந்திக்குப்புத்திபுகட்ட வடபாகத்திலும் தென்பாகத்திலும் இந்தியாவில் பலவிதத் துன்பங்களை உண்டாக்கிவிட்டதே! இதிலிருந்தாவது காந்திக்கு நற்புத்தி பிறக்கலாகாதா?

பிடிவாதமும் ஆகம்பாவமும் நிறைந்த காந்தியோ, "இந்தத் துன்பங்களெல்லாம் சாதிஹிந்துக்கள் செய்த பாபத்தின் பலன்கள்" என்று தனது குதர்க்கவாதத்தை இதிலும் நுழைத்து விட்டார். காந்தி மதப்படி எவ்வளவோ காலமாக சாதிஇந்துக்கள் செய்துவரும் பாபங்களுக்காகத் தெய்வம் வெகுகாலம் முன்பே சிக்ஷை விதித்திருக்கலாமே? இந்த மஹாத்மா இவ்வுயர்ந்த பிரசாரம் செய்யும் காலத்தைத் தெய்வமும் எதிர்பார்த்திருந்தது போலும்!

## புயற் சேதத்திற்கு உதவி எங்கே?

ஹரிசனங்களின் பெயரைச் சொல்லி சம்பாதிக்கும் பணத்தில் சிறிது பாகமாவது ஹரிசனங்களுக்கு உபயோகப்பட வேண்டாமா? இதுதானில்லை. தஞ்சை ஜில்லாவிலும், தென்னாற்காடு ஜில்லாவிலும் தற்காலம் புயலில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் சாமான்ய மல்ல. விசேஷமாக ஹரிசனங்கள் தான் கஷ்டப்படுகிறார்கள். மாயூரம் முதல் சிதம்பரம் வரை ரயில் மார்க்கமாகப் போகிறவன் கண்ணிற் படும் காக்ஷியே மிகமிகப் பரிதாபகரமானது. ரயில்வேக்கு இருபுறங்களிலுமுள்ள ஹரிசனச்சேரி பாழாய்ப்போயிருப்பதையும், அங்குள்ள ஆதித்திராவிடர்கள் நிர்க்கதிகளா யிருப்பதையும் கண்டால் கல்மனமும் உருகிப்போய்விடும். காந்தியோ காந்தி சிஷ்யர்களோ இவ்விடம் வந்து, இவர்கள் மாயக்கண்ணீர் விட்டுப் பரிந்துபேசும் ஹரிசனங்களுள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயாவது கொடுத்து உதவிசெய்ய



லாகாதா? நடைப்பிணங்களான இவர்களுக்கு இப்போது உதவி செய்ய உபயோகப்படாத பணம் எதற்கு? இவர்களுக்கு ஒரு தம்பிடிகூடக் கொடுக்காமல் இவர்கள் பெயரைச் சொல்லிப் பலரிடமும் பணம் பறிப்பது தெய்வசம்மதமாகுமா? ஹரிசனங்களுக்குக் காந்தி உதவிசெய்யவேண்டாம். பலவிதத்திலும் கஷ்டநஷ்டங்களை அநுபவித்துவரும் தஞ்சை தென்னாற்காடு ஜில்லாக்களில் பணவசூல் செய்ய வேண்டாமென்றாவது தனது சிஷ்யர்களுக்குக் கட்டளையிடக்கூடாதா? இந்த ஜில்லாக்களில் தான் பணம்பெற்றுக்கொள்ள முடியாதென்று பஹிரங்கமாய் அறிவிக்கலாதா? அல்லது, இந்த ஜில்லாக்களில் வசூலாகும் பணத்தை இந்த இரு ஜில்லா ஹரிசனங்களுக்கும் கொடுத்துவிடலாகாதா? ஐயோ! காந்தி ஹரிசனங்களிடத்திலிருந்துகூடப் பணம் பிடுங்கிவிடுவது நியாயமா? மிகவும் நஷ்டமடைந்த சீர்காழியில்கூட ஆயிரம் (1000) ரூபாய் காந்திக்கு வசூலாகப்போகிறதாம். இதைவிட விந்தையும் விசனமும் உண்டா? இந்த ஆயிரத்தில் ஒரு ரூபாயாவது சீர்காழி ஹரிசனங்களுக்குக் கிடைக்கப்போகிறதா? இல்லவே இல்லை. எல்லாம் வாசாகைங்கரியமே.

ஏதோ கிஞ்சித்தாவது உதவி செய்யக் கூடியவர்களிட மிருந்தும் பழைய மதிப்பினாலும் நிர்ப்பந்தத்தாலும் இவ்வாறு பணம் தட்டிப்பறிக்கப்பட்டு விட்டால், பிறகு ஹரிசனங்களுக்கு உதவிசெய்பவர் யார்? இது தான் ஹரிசன பக்ஷபாதம் போலும்?

## கிஸ்திவஜா கேட்பதேன்?

சட்டசபையில் மிராசுதார்களுடைய கஷ்டத்தை எடுத்துச் சொல்லி சர்க்காரிடம் கிஸ்திவஜா செய்யும்படி பெருங் கூச்சலிடப்படுகிறதே. நம்மைக் காப்பாற்றும் ராசாங்கத்திற்குச் சாஸ்திரமுறைப்படியும் லௌகிக ரீதியிலும் நாம் செலுத்த வேண்டிய கிஸ்தியைக் கட்டக்கூட சக்தியற்ற நம்மிடமிருந்து ஒரு உபகாரமுமில்லாக் காந்தியிடத்துக்குப் பணம் போவது தர்மமாகுமா? நமது ஸ்திரீகளிடமிருந்து ஆபரணங்களைக் கழற்றிக் கொடுக்கும்படி காந்தி கேட்பதும், இப் பேதையர் சிலர் தாலிமுதல் கழற்றிக் கொடுப்பதும் எந்த நியாயத்தில் சேர்ந்தது? இந்தப் பரம ஆபாசமான காரியத்தைச் சில பத்திரிகைகள் ஆதரித்து, காந்தியின் "பொக்கைவாய்ச் சிரிப்பை" வர்ணிப்பதுதான் மகா விசேஷம்.

## மிராசுதார்கள் கவனிப்பார்களா?

தஞ்சை ஜில்லாபோர்டுத் தலைவரும் வேறு சில பிரமுகர்களும், புயற்காற்று கஷ்ட நிவாரண நிதி திரட்டப் புறப்பட்டு பத்திரிகைகளில் பணவுதவி செய்யும்படி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களுக்குக் காந்தி வசூலை நிறுத்த முன்வரத் தைரியமில்லையா? தஞ்சை ஜில்லாவில் சம்பாதிக்கும் பணத்தை எங்கள் கஷ்டநிவாரண நிதிக்குக் கொடுக்க வேண்டுமென்று காந்தியைக் கேட்க மனம் கூசுகிறதே! பயப்படுகிறார்களே! புயற்காற்றில் நஷ்டமடைந்தும், சமீபத்தில் பெய்த மழையில் கொஞ்சமேனும் கிடைக்கக் கூடிய தானியமும் போய் பலவிதத்திலும் துன்பப்பட்டும் வாடிவதங்கி நிற்கும் தஞ்சை ஜில்லாவிலுமா காந்தி பண வசூல்?

## ஸர்க்கார் ஏன் தடுக்கவில்லை?

இந்த அநியாய வசூலைக் கவர்ன்மெண்டாராவது இந்த ஜில்லாவில் நடக்காதபடி தடுக்கக்கூடாதா? பெண் பிள்ளைகளிடமிருந்துகூடப் பணம்

பறிக்கப்படுகிறதே? இதையாவது சர்க்கார் தடுக்கலாகாதா? முழுமோசம்! முழுமோசம்! எவ்வளவு ஆண்களும் பெண்களும் வீண் பெருமைக்கு ஆசைப்பட்டுக் கொண்டு கையிலுள்ள சிறிது தனத்தையும் இந்தப் பாழும் கடலில் கொட்டிவிடுகிறார்கள்! இதிலும் எவ்வளவோ சூதாம்! குசிலிக்கடை ஜலத்தில் நடக்கும் பல தந்திரங்களும் இங்கும் நடத்தப்படுகிறதாகவும் கேள்வி.

### பீஹாருக்கு வாசா கைங்கர்யமே:

இதையும் கவனியுங்கள். வடதேசத்திய காந்தி சிஷ்யர் ஒருவர் காந்தியை பாபு பீஹார் கஷ்டநிவாரணத்துக்கு ஒரு அறிக்கை வெளியிடும்படி வேண்டிக்கொண்டார். உடனே நமது மகாத்மா அறிக்கை வெளியிட்டுவிட்டார். உலகத்தில் எல்லாரும் பீஹாருக்கு உதவிசெய்ய வேண்டுமாம். தான்மாத்திரம் சம்பாதித்த பணத்தை மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு போகவேண்டுமாம். ஒரு தம்படியும் கொடுக்கமுடியாதாம். என்னே! வாக்சகாயம்! அறிக்கைமேல் அறிக்கையாகக் காந்தி சிஷ்யர்கள் வெளியிடுகிறார்கள்.

காந்தி முதலில் தனது ஆரிசன வியக்கத்திற்குப் பணம்பெற்றபிறகு வெறும் கையாக நிற்கும் ஜனங்களிடம் பீஹாருக்குப் பணம் கொடுக்கும்படி பிரசங்கமாரி பொழிகிறார். தாலி பீலி முதல் கொடுத்தபிறகு கையில் ஒருகாசுமில்லாத சனங்கள் எப்படிக் கொடுப்பார்கள்?

இந்தச்சமயத்தில் காந்தி போன்றவர்கள் வேண்டுமென்பதில்லை. காத்தவராயன் ஒரு அறிக்கை வெளியிட்டாலும் போதும். பீஹாரில் கஷ்டப்படும் சனங்களுக்குத் தயாகுணமும், தனமுமுள்ள பலரும் உதவிசெய்ய முன்வருவார்கள். இதில் காந்திக்கு ஒருவிசேஷமுமில்லை.

ஹரிசன நிதியிலிருந்து சிறிதாவது தற்காலம் பீஹாருக்கு சகாயம் செய்யவேண்டுமென்று சிந்தாமணிபோன்ற உண்மைத் தேசாபிமானிகள் காந்திக்கு எழுதினாலும் பயன்படுவதில்லை. காந்தி கொடுக்கவா சம்பாதிக்கிறார்! இத்தப் பணங்களுக்கு வேறு பல செலவு காத்துக்கொண்டிருக்கிறதே! உடனே முன் அறிக்கை விரும்பிய காந்தி சிஷ்யர் ஹரிசனநிதி இதற்குவேண்டாமென்று எழுதிவிடுகிறார். என்ன கட்டுப்பாடு! என்ன முன்கூட்டியேற்பாடு! என்ன லௌகிக தந்திரம்!! இந்த ஸ்திதியில் காந்திக்குப் பணம் எதற்கு?

* * *

## 2. காந்திக்குச் சம்பந்தம் உண்டா?

ஆலயத்தைப்பற்றிப் பேச எவருக்கு அர்ஹதையுள்ளது? எந்த சாஸ்திரவிதிப்படி ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, தெய்வவிக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றனவோ, பிரதிதினமும் பூசை முதலியன நடந்துவருகின்றனவோ, அந்தச் சாஸ்திரங்களிலும், அந்த அநுஷ்டானங்களிலும் பூர்ண விசுவாசமுள்ளவன் அல்லவா இவ்வாலயவிஷயங்களில் புகுந்து பேச யோக்கியதையுள்ளவன்! காந்திக்கு அவ்வாறான ஆகமசாஸ்திரங்களில் நம்பிக்கையுண்டா? இருந்தால் ஆகமசாஸ்திரங்களுக்கு விருத்தமாக இவ்வியக்கத்தை ஆரம்பிப்பாரா? அந்த ஆகமசாஸ்திரங்களை அறியத்தான் இவர்க்கு யோக்கியதை உண்டா? அவைகள் சம்ஸ்கிருதபாஷையி



லல்லவோ இருக்கின்றன. அவைகளுக்கு இங்கிலீஷ் தர்ஜிமையும் கிடையாதே. இவ்வாறிருக்க, இவர் எப்படி இந்தவியக்கத்தில் சம்பந்தம் வைப்பது?

### காந்திக்குத் தாசிவீடு மாறியதா?

இந்தக்காந்தி, ஆகமமுறைப்படி கட்டப்பட்டும், அம் முறைப்படியே பூசாதிகள் நடப்பதுடன் ஆடல்பாடல்களும் நடந்து வரும் நம் தென்னாட்டுக் கோவில்களைத் தாசி வீடு என்று அழைக்கவில்லையா? இந்தத் தாசிவீடுகளுக்குத் தன் மனிதர்களை அழைத்துப்போகப் பிரயத்தனப்படுவது கேவலமல்லவா? இவர் தாசிவீடு போவதில்லையென்பதுமட்டும் மிகவும் உண்மை. பிச்சைக்கார பைராகிமுதல் மகாராஜாக்கள்வரை வடதேசத்திலிருந்து நம் தேசத்திற்கு வந்து சேதுஸ்நானம் செய்துவிட்டு, ராமேஸ்வரம், மதுரை, ஸ்ரீரங்கம், கும்பகோணம் சிதம்பரம், காஞ்சீபுரம், திருப்பதி முதலிய திவ்ய தேசக் கோவில்களுக்குச் சென்று பகவத்தரிசனம் செய்துவருகிறார்களே? இந்தமகாத்மா இதுவரை எந்தப் புண்ய தீர்த்தத்திலாவது ஸ்நானாடினதாகவோ, எந்தத்திருக்கோயிலிலாவது பகவத்தரிசனம் செய்ததாகவோ கேள்விப்பட்டிருக்கிறோமா? பணம் என்றால் பதினைந்து காதம் ஓடுகிறாரல்லவா இவர்? இவர்தான் ஹிந்துவாம், சநாதனியாம், தேசோத்தாரகராம், உலக சிரேஷ்ட உத்தமராம். என்னே பேதைமை! என்னே மோசம்! விக்ரக பூசையையும் வெறுக்கும் சில சமாஜிகளும், மதாந்தரஸ்தர்களுங்கூடக் கோவில்களிலுள்ள சிற்பம் ஆபரணம் முதலியவற்றைப் பார்ப்பதற்காகவாவது கோயில்களுட் செல்வார்களே. இவர் செல்வதுண்டா? தாசி வீடு போகமாட்டார் போலும்?

### சர்க்காராவது கவனிக்கலாகாதா ?

ஏழையான இந்திய மக்கள் இப்படிக் கொள்ளையடிப்பதைச் சர்க்காராவது கவனிக்கவேண்டாமா? ஒருவன் லாட்டரிச்சீட்டுக்குச்சம்மதிபெறுவிட்டால் என்னபாடு படுத்துகிறது சர்க்கார். ஏழைகளைக் காப்பாற்றவன்றோ குதிரைப்பந்தயத்தை ஒழித்துவருகிறது சர்க்கார். ஒரு தர்ம சொத்தை அதன் சொந்தக்காரன் அநுபவித்தால்கூட சட்டதிட்டங்களும் ஸ்கீம்சூட்டுக்களும் கிளம்பிவிடுகின்றனவே. இந்தப் பகற்கொள்ளைக்கு ஸ்கீம் ஏற்படுத்த வழிகிடையாதா? ஆங்காங்கு பறிக்கும் முடிச்சுப்பணமாவது பத்திரிகைகளில் வெளிவருகிறது. கொடுக்கும் நகைகளுக்குக் கணக்கு என்ன? அந்த நகைகளின் மதிப்பென்ன? கொடுக்கும் ஆபரணங்களுள் தருப்புக்கமலங்களும், விலோன் டைமண்டுகளும், ரோல்டு கோல்டுகளும் எவ்வளவு என்பதாகவாவது வெளியிடப்படுமா?

### காந்தியின் தந்திரமே தந்திரம்!

காங்கிரஸ் பணமென்றால் பறிமுதலாகிவிடும் என்று நினைத்தல்லவா இம்மாதிரியான தந்திரம்? காந்திக்குப் பணம்தான் தேவதை. சபர்மதியாச்ரமம் கலைக்கப்பட்டதுபோல் பாவிக்கப்பட்டதே! இவருடைய சிஷ்யை அரிசனங்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு மறுபடியும் நடத்தவந்திருப்பதைக் கவனிக்கவேண்டும். ஓட்டிவிட்ட பசுக்களெல்லாம் மறுபடியும் அரிசனங்களுக்காக ஓடி வருகின்றனவாம். பணம் ஓடியோடி வரப்போகிறது. முழுமோசம்; முழுமோசம். ஏழை சனங்களே! இனியாவது விழித்துக்கொள்ளுவீர்களா?

# 3. காந்தியே! ஏமாறவேண்டாம்.

காந்தியே! நீர் போகுமிடங்களில் கூட்டமும் பணமும் வருவதைப் பார்த்து உம்முடைய அபிப்பிராயத்தைச் சனங்கள் ஒப்புக்கொள்ளுகிறதாக நினைத்து ஏமாறவேண்டாம். கூட்டங் கூடுவதற்கும் பணம் கிடைப்பதற்கும் காரணம் வேறு.

நமது சனங்கள் எதுவந்தாலும் வேடிக்கை பார்க்க ஏராளமாகக் கூடுகிறார்கள். குதிரைப் பந்தயம், ஆகாசவிமானம், கண்காக்ஷி முதலியன பார்க்க ஆயிரமாயிரமாகக் கூடுவது வழக்கமில்லையா? வைஸ்ராய் கவர்னர் இவர்களைப்பார்க்கக் கணக்கில்லாமல் கூடவில்லையா? இந்தியாவில் வேடிக்கை பார்க்கவேண்டிய வஸ்துக்களில் உம்மையும் ஒருவராகச் சனங்கள் எண்ணியிருக்கிறார்கள்.

அவர்கள் உம்முடைய கொள்கையை ஆதரிக்கவந்தவர்களல்ல. இதற்குமுன் நீர் வந்தபோது கதர்! கதர்!! என்று கதறினீர். அப்போதும் ஒவ்வொரு ஊரிலும் பத்தாயிரக்கணக்காக சனங்கள் கூடினார்களே? அதில் 100-க்கு ஒருவராவது நிசமாய்க் கதர்தரித்தபேர் உண்டா? இப்போது நீர் காணும் கூட்டத்தில் எத்தனைபேர் கதரைக்கட்டியிருக்கிறார்களென்று பாரும்? சட்டமறுப்பு, ஒத்துழையாமை பிரசாரத்தில் கூடின லக்ஷக்கணக்கானவர்களில் எவ்வளவுபேர் அவைகளை ஆதரிக்க முன்வந்தார்கள்? இப்போது மனிதர் கிடைக்காமல் நீர் சட்டமறுப்பை விட நேர்ந்ததல்லவா? ஆகையால், உம்மை வேடிக்கை பார்க்கவரும் அனைவரும் உமதுகொள்கையை ஆதரிக்கிறவர்களல்லவென்று தெளியும்.

பணவசூலும் அவ்வவ் வூர்களிலுள்ள ஒவ்வொருவருடைய தாக்ஷண்யத்துக்காகவே ஆகிறது. குடந்தையில் ஒரு பிரபல டாக்டர் வசூலிக்கப்போனால் 'டாக்டர் தாக்ஷண்யம், என்ன செய்கிறது, தொலைந்துபோகிறது, இந்த இழவுக்குப் பணம் தொலைக்க வேண்டியிருக்கிறதே' என்று எண்ணாதவரோ, சொல்லாதவரோ கிடையாது. பணம் வசூலிக்கிறவர்களும், ஆலயப் பிரவேசத்தையும். தீண்டாமை விலக்கையும் மறைத்து ஏழைகள் முன்னேற்றத்திற்காக வென்று கேட்கிறார்கள். இதில் பலருக்கு அனுதாபமிருக்கலாம். ஆகையால், அங்கங்கே ஸ்தல தாக்ஷண்யத்தாலும் நிர்ப்பந்தத்தாலும் பணம் உமக்குக் கிடைக்கிறதே யல்லது, உமது தீண்டாமை விலக்குக் கொள்கையை ஆதரித்துக் கொடுக்கப்படவில்லை. இந்த உண்மையை நீர் அறிந்து ஏமாறாதிருப்பீராக.

[இம்மூன்று வெளியீடுகளும், கும்பகோணத்துக்குக் காந்தியார்போனபொழுது, குடந்தைகாந்திபஹிஷ்காரக்கமிட்டியாரால்வழங்கப்பெற்றனவாகும்.]

---

உ

## உடன்போக்கிற் றேடிய சென்ற செவிலி ஈந்தொடு வினையது.

சென்னை, சூளை, திருவொற்றியூரான் வடமொழிக் கல்லூரி
உயர்திரு: பண்டித சித. நாராயணசாமி சுவாமி அவர்கள்.

ஒலிவல் லீந்தே! யொலிவல் லீந்தே!
கலிவந்து புகுதரா வொலிவல் லீந்தே!
நீயே, சிறுநெறி மருங்கே தெளிநிலா மதியும்
ஞாயிறுஞ் சிவனை நாட்டியே பணிந்த
சிவந்திகழ்ந் தோங்கும் பவந்தெறும் பெரிய
செல்வம் படைத்துத் தேம்பொழி லுடுத்த
வளைமதில் கெழுமிய வளநக ராகும்
சிறுவா புரிக்குந் தெளிநீர்ப் பொய்கையுந்
தண்டலை யதனொடு கண்டவர் களிகொளச்
சாலி வளனுந் தழைத்தினி தோங்குங்
கலைநக ரதற்குங் காணிய விடையெனப்
பூமகன் கொண்ட பொலந்தரு நிறைகோல்
நாப்ப ணிலகுறு நாவெனத் திகழ்தி,
முகில்கண் படுக்க வகிலு மாரமும்
வேங்கையு மூங்கிலு மோங்கிய தேக்கு
மாணுஞ் சேயு மணிபா ணிமிரு
நாகமு மெகினு நறையு நரந்தமு
மன்பிற் சான்றோ ரின்பெனத் தழைத்தே
யுயர்தரு முச்சிய மயர்வறும் விறல்சேர்
குறவரு மருளுங் குன்றக மிடைந்துகல்
லுழவு மலிந்து பளகறப் பயின்ற
கொங்கச் செல்வக் கோமா னாகிய
விளங்கோ வடிக டலந்தரு மினிய
பலப்பல வனப்புறுஞ் சிலப்பதி காரம்
போலச் சாலப் புகழமைக் தோவா
முத்தமிழ் முழங்கு மூவாச் சீர்திகழ்
தெய்வம் பழுநிய திருமா மதுரையி
னான்காஞ் சங்கத்து நல்லுறுப் பாய
செந்தமிழ்ச் சாலையிற் சிறப்புடன் கெழீஇய
தலைமை யாளன் மலைநிகர் தோற்றம்
பெற்றவன் முற்று நற்றவக் குரிசில்
நான்மறை பயின்ற நாவின னாதன்
வடமொழி தென்மொழிக் கடலிடம் பெறவே
தேறிய புலவன் வீறுதம் மாணவ
ரென்றே யுரைக்கினிவ் வுலக மதிக்கும்
வகையே புரிதருந் தகைமை யாளன்

றண்ணளிக் குறையுள் நுண்மா ணுழைபுலக்
கொற்றவ னாகுமெங் கோமான் குருபரன்
திருநா ரணனெனுந் தெய்வப் பெயரோன்
உளந்தனி ஞான மொளிர்தரும் விளக்காம்
மாலென நீட்சியை, மண்ணிடை வாழ்நர்
ஆனா விசும்பினைக் காணிய படர்தரு
நெறியென விலங்குதி, நெல்வளம் பொலிதருங்
குன்றூக் குடியினிற் கொண்டலு நிகர்தராக்
கொடைக்கை யாள னடைக்கலங் காப்போன்
மறையோம் பாளர் மகிழ்தரக் குறைவறக்
கொடுத்தே யுவக்குங் குணமிகப் படைத்தோன்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரெனச்
சங்கச் சான்றோர் சாற்றிய மொழிதெளிந்
தாற்றா மாக்கட்கு மாற்றுநர் தமக்கு
மரும்பசி யவித்தலும் பெரும்புலந் தருதலுங்
கடனாக் கொளீஇய காமருந் துறவோன்
பறையா நெறியினன் பிறவா நெறிதருங்
கோவிலூர் மேவிய குருபர னாகிய
வீர மகேசன் மெய்த்தவத் துதித்த
கான்முளை யென்னுங் கணபதிப் பெயரோன்
அளியெனத் தழைத்தனை, யவன்ற னுரமென
வயிரம் படைத்தனை மறநெறிப் படர்ந்து
செந்நெறிச் செலாத சிறியோ ரிழிதகை
யுளமென நொய்ய வுலர்சரு கேந்தி
விசும்பிற் படர்தரும் விரைகொளுஞ் சூறா
வளியொடும் பசையறு மரனொடுந் திகழுங்
கானத் தானேய் கடவுள்போ லாதே
யொற்றைத் தாளா லுஞற்றிய தவந்தனால்
தன்னினு மிகுதர வாக்கிய தகையென
ஞாயிறுந் தாங்கினை, ஞாலத் தாங்கண்
துறவற நெறியினை யறவெறிந் தஃதே
வட்புலத் தார்வயின் வாங்கிய தாமென
வெள்ளூ புகழுறு மிழிதகை மாக்கட்குத்
தென்புல மதனிடைத் துறவறந் தீயீர்
இன்றே யன்றே யென்று முளதென
வறிவு கொளுத்து மாறென வுறுகிளை
களைந்தனை யாகி நிலந்தனிற் பெரிதும்
புணர்தற் றுன்பமும் பிரிதற் றுன்பமும்
இலையாய், ஒருதனி வாழ்க்கை யுற்றனை, யொலிதரு
மறைமுடி வறிந்த விறைதிரு வருளால்
கருவி நான்கினுங் கடையே போகிய
வுரவோன் பொருளென வொன்றென நின்றனை
அன்றியும், தூக்கணங் குரீஇக் கூடு சுற்றிலும்
ஞால்தரச் செங்காய் ஞான்றகந் தரத்தொடு



நின்றுவெண் குஞ்சஞ் சூழ்தர நிலவுறும்
பவளக் குஞ்சந் திவளுங் காம்பொடு
கவிந்த கவிகை யாமெனத் தோன்றி
ஆறிடைச் செல்வீர்! ஆறிடைச் செல்வீர்!
அயர்வொரீஇத் சென்மி னயர்வொரீஇச் சென்மின்
எனவே, தாங்கரு மகிழ்வொடு தூக்கணங் குரீஇயால்
கூஉய் நிழல்கொடு குளிர்பித் தத்தை
வல்லிய பசிக்காம் வல்சி தந்தென
வாதவூர்ச் செல்வன் போதமார் திருவடி
கண்ணுறுங் குரிசி லெண்ணருங் குணத்தோன்
கல்வி மேய செல்வப் பாவலன்
மணிவா சகசர ணாலய னாமெனு
மணியார் முனிவர னகமெனக் கனிந்து
புலம்படர் பெரியோர் நலம்படர் நடையென
வொழுகுறுங் காவிரி கெழுமுறுஞ் சோழ
வளநா டதனின் மழவேற் றண்ணல்
கூத்துகந் தாடிய வேத்தருந் தலமாம்
தில்லை மேய செம்மலெம் மாரியன்
ஞானங் கனிந்த நற்றவக் குரிசிலாஞ்
சிதம்பர முனிவரன் பதந்தினம் பராஅய்
அவனருள் பெரீஇப் புவனம் புகழ
வெத்தினும் வல்லனா யிலகிய தவத்தோன்
பரஞ்சோதி யென்னும் வரஞ்சேர் நாமன்
போல வினிமை சாலப் படைத்த
பழம்பல கொடுத்துப் பரிவுற அனுப்பியை,
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கும்
சூழுடுத் தோங்கிய துகளறுங் கோநகர்
நிலவுறுஞ் செந்தமிழ் நிலவுறுஞ் சாலை
மகாஅ தேவ வெனுமொரு மறையினை
யோவா துரைத்தலி னாவா வதனைத்
தன்பெய ராக்கிய மன்பெருந் தனிகன்
அன்புட னிறுவிய வின்புறு சாலை
கற்பக விநாயக கலாஅ சாலையெம்
முற்பவத் தவத்தால் முளைத்த சாலையில்
தாயினு மினியராய்த் தமிழ்தருங் குரவரா[...]
ஒளிகொடு விளங்கிய வளிகொடு குளிர்ப்பி[...]
சான்றோ ராகிய தவலரும் பெருஞ்சீர்
வேங்கடா சலமென மிளிர்பெருந் தோன்றலும்
தாழ்வோர்க் கருளும் ஆழ்வா ரெனும்பெயர்
படைத்தநற் குரிசிலு மாகிய பண்பர்தம்
நூல்பல வற்று ணுழைதரு மதியென
கூரிய நுனிகொடு குலவுறு மிலைபல
பாண்டி நாடே பழம்பதி யெனுமிக்
காண்டகு நாட்டிடைத் தாண்டவ முஞற்றி

186937

தமிழ்நலங் கெழுமி யமிழ்தினு மினித்தே
காம முதல கடும்பகை கடிந்த
வேமமா ருளமெனக் காமுறத் தெளிந்து
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி
யாமெனப் புலவர் தாமுரை தரவே
கால்பல வற்றொடு கவின்றரும் பெரிய
யாறென விலைபல யாத்த மடவினை,
யென்றூ ழுதனு னன்றுநன் றுற்ற
முல்லை திரிய முளைத்த பாலையில்
தோன்றிய நினக்கிவ் வான்றவர் தகைமை
யாங்ஙன முற்றது? யாயே யுலகினின்
மாயமே யம்ம! மாயமே யம்ம!
இலையிலை யிலையிலை யெறித்தநாற் றத்துக்
கள்ளி வயிற்றி னகில்படும், அன்றியும்
கொலைபுரி மறவர் குழுவினம் முருகனும்
விழைதரச் சாயல் விளைதரு மானும்
அன்பே யென்ன வணிதிகழ் வாதவூர்
முனிவன் மொழிந்த மூர்த்தியுந் தோன்றினர்,
பொய்யே கலனுப் புனைதரு நாவிடை
மெய்யு மொரோவழி விளைதரக் காண்டும்,
இரணிய னூஉ வீன்றனன் மெய்ப்புலம்
பெறூஉம் பெரிய பிரக லாதனை
ஒன்றே பலவே யுதனு லியாவதுங்
கடுப்பே யிலாது கடிந்தனன்; ஈந்தே!
யானே, யாண்மக வாய்த்துங் கான்முளை யற்ற
வந்தி போல மலங்கின னாகி
முதிர்பரு வத்து முதிர்சரு கருந்தியும்
தரையிடை மெழுகி யரையுண வருந்தியும்
நீருண வாக நெடுநாட் பருகியும்
வெம்புறத் தசைஇய கையின ளாகி
[illegible]யா லுணவினை மடுத்தும் ஐயகோ!
நோன்பு பல்ல நோற்றனன்; அன்றியும்,
மாலவன் கோயிலும் மாதவன் கோயிலும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்
கோழி யோங்கிய கொடியோன் கோட்டமும்
உளவுள புலந்தொறு முவப்பொடு செலீஇக்
கும்பிடு தான மன்பொடு செலுத்தியும்
மாவிளக் கிட்டு மலர்கொடு பழிச்சியும்
நீர்பல மூழ்கியும் நிலத்திடை யைந்தலைப்
பைவிரி நாகமும் பைந்தா ளொன்றினிற்
பூமூன்று மலர்ந்த பொலிவென முக்கணுந்
துதிக்கையுந் தோன்று மதிக்கைக் கெட்டாத்
தந்தி வதனத் தெந்தையும் பயிறரும்
அரையொடு கெழுமிய வரைசினைப் பலநாள்



வேம்பொடு மணத்தித் தேம்பட வைகலும்
வலம்பல புரிந்து மாதவ ருளங்கொள
வேண்டுவ கொடுத்தும் வேணவா வமைய
வீன்றனன் பாவையை யீன்றனன்; ஆங்கே
கணித மாக்களைக் கொணர்ந்து கவினொடு
நாளுங் கோளு நன்கன மெழுதிப்
பனவர் தமக்கு மனமகிழ் வுறவே
விழைவன கொடுத்து மேலாங் கடவுளர்
உவப்புறச் சிறப்பு விடுத்து மோர்நாட்
கிளையினர் மகிழ்கொள கலைப்பயில்வு தொடக்கி
யுடனு முணர்வு மோங்கிய நாளும்
வழுவா மரபின் மண்டிணி ஞாலம்
பொற்கை வழுதி போற்றிய வாறென
நான்காஞ் சங்கத்து நல்லுணர் வெய்திய
கலைவிருப் பாளரா முலைவின் மாணவர்
பாடம் போற்றும் படியென, வொருசெய்
மிடிய னதனை விளைதரப் புரியும்
படியென, மறைநெறிப் படர்தரும் பனவன்
அனலினை யோம்பு மாறெனத், திலீபன்
வானுன் புரந்த வகையெனத், தமிழ்தேர்
தெய்வத் தடாதகைத் தேவியைக் கோதையை
யீன்றோர் போன்மென வெழில்பெற வைகலும்
வளர்த்தனன், மன்றவம் மடவோ டம்மை
யாரோ வறிகிலன் யான்செய் தலைவிதி
யயலாள் பயந்த வாண்மக னொருவன்
கண்ணன் வெண்ணெய் கவர்ந்தென நிசியில்
கவர்ந்தனன்; ஐயகோ! காளைதன் னழகினிற்
கட்டுண் டிறந்தின ளொட்டுணை தானும்
நன்றி யுள்ளலள் நடந்தன ளம்ம!
காமங் கொடிதே! காமங் கொடிதே!
களைக ணுகாக் காமங் கொடிதே!
சின்னஞ் சிறுமியாய்த் தெளிந்தன ளன்றி
யின்ன வகைதான் புரிகுவ ளிவளெனக்
கண்டிலன்! கேட்டேன், கண்டன னுகில்
சிறையும் வலிதரச் செய்குவ லம்மே!
முடியாக் காலத்து முந்திய வன்பொடு
பேணுவ ளிவளெனப் பெருநினைப் புற்றனன்;
அஃதே யமைக! வணிகிளை யானர்முன்
குலந்தருங் கொழுநற் றேறிக் கோதற
மண்களி கூரு மணவினை முடித்து
கண்களி கூருங் களிப்பு மிழந்தனன்;
வெயிலெழு நேர மெல்லிய வடிதாந்
தாங்குந கொல்லோ! தாங்குந கொல்லோ!
பாதை சுடுஞ்சுடும் பாவியென் படுவளோ!

எனவென் றேழியு மேங்கித் தளர்தர
என்மக ளொருத்தியும் பிறன்மக னொருத்தனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
இவ்வழிப் படர்ந்தனர் கொல்லோ? இல்ல:
காலே, பரிதப் பினவே; கண்ணே, பொன்னிலை
நோக்கி நோக்கி வாளிழந் தனவே;
மெய்யே, மழையிலா துணங்கிய வனமென லாயது;
நாவே, யளப்பருங் குணங்களை யழிக்குமிவ றன்மை
பெற்ற வுளமெனப் பெரிதும்வறள் வுற்றது;
காணே னம்ம! காணே னம்ம!
அறிந்தனை யாயிற் புரிந்துரை மன்னே.

---

## கருமசண்டாளர்.

சண்டாளர், பிறப்பால் சாதிச்சண்டாளர் என்றும், செய்கையால் கருமசண்டாளரென்றும் இருதிறப்படுவர். பறையர், பள்ளர் முதலிய இழிகுலத்தவர் சாதிச் சண்டாள ராவர். முற்பிறப்பிற் செய்த சிறியதவத்தின் பயனாக உயர்குலத்திற் பிறந்து, பெரியபாவத்தின் பயனாகப் பறையர்களோடு உடனிருந்து உண்டும், பறையர்களோடு சேர்ந்து பாடி ஆடியும் திரிகின்றவரே கருமசண்டாளராவர். இந்தக்கரும சண்டாளர்கள், சாதிப் பறையர்கள் ஆலயப்பிரவேசம் செய்யலாமென்று தாண்டவம் புரிகின்றனர். அம்மட்டோ: சாதிப்பறையர்கள் ஆலயப்பிரவேசம் செய்தல் கூடாதென்பதற்குச் சைவ நூல்களில் ஆதரவு இல்லையென்றும், கூடுமென்பதற்கு ஆதரவு இருக்கிறதென்றும் கூச்சலிடுகின்றனர். ஆதரவு எடுத்துக்காட்டிக் கூறுதல் முறையாகுமன்றி, வெறும் வாய்ப்பறையறைதல் முறையாகா தென்பதை இனியேனும் அக்கூட்டத்தின ருணர்ந்து ஆதரவு காட்டி முன் வருவார்களாக.

உண்மைச்சைவன்.

---

"இழிந்த சாதிய ராயினும் புண்ணிய மியற்றிற்
கழிந்த மேன்மைகூர் சாதிய ராகுவர் கடையாய்
ஒழிந்த பாதக மியற்றுந ருயர்த்தவ ரெனினும்
பொழிந்த தீமைசால் புலைத்தொழிற் புன்மைய ராவர்."

காசிரகசியம்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்."

பொய்யாமொழி.

# சிவஞான சுவாமிகள் திருவுள்ளம்.

தேவகோட்டை, சிவாகம சங்கத்துச் சித்தாந்த போதகர்
திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள்.

"சிவனெனு மொழியைக் கொடியசண் டாளன்
செப்பிடி னவனுட னுறைக
அவனொடு கலந்து பேசுக அவனோ
டருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தா லையனே கதிவே
றெனக்கிலை கலைசையாண் டகையே."

(கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி: செ—76.)

இத்திருப்பாசுரத்தைத் தீண்டாதார் ஆலயப் பிரவேசம் கூடுமென்பதற்கு எடுத்துக் காட்டுகின்றனர். உறைக, பேசுக, உண்ணுக என்பது எவரும் வெளிப்படையாக உணரத்தக்க செம்பொருள். இச் செம்பொருளே ஆசிரியருக்குக் கருத்தாயின், உவமையில் சுருதி விதியினை நம்பி ஒழுகாதவரோடு என்று கூறியிருப்பர். பொருள்தனை நம்பா ஊமரென்று கூறியிருக்கமாட்டார். பொருளென்னுஞ் சொற்கொண்டே பொருளையுணரும் பாக்கிய மில்லையாயினும் ஊமரென்னுஞ் சொல்லைக் கொண்டாயினும் உண்மைப் பொருளையுணர்ந்து கொள்ளாமையை என்னென்று சொல்வது. பேசாதவர் ஊமரெனப்படுவர். ஆகவே, பொருள்தனை நம்பா ஊமரோடு என்பதற்கு, சிவனெனுமொழி சண்டாள னாதற்குரிய பாவத்தையும் அறவே நீக்கும் பெருமையுடையதென நம்பி அம்மொழியை உச்சரிக்காதவரோடு என்பதே பொருள். இனியேனும் இவ்வுண்மையை உணர்ந்து விபரீதப் பொருள் கொண்டு பிறரை ஏமாற்றாதிருக்கும்படி சிவஞான சுவாமிகள் திருவருள் துணைபுரிவதாக.

---

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்மீது சரமகவி.

1. தென்னிலங்கை வண்ணைநகர் தன்னில் முன்னர்ச்
செய்தவத்தின் பயனாகச் சிவம்வி ளக்குந்
தன்னிகரில் வேளாளர் குலத்திற் றோன்றிச்
சைவநூல் பலகற்றுத் தவமே மேற்கொண்
டுன்னரிய சிவபெருமா னடியே யுன்னி
உலகினின்மே லாஞ்சைவ மோங்கச் செய்த
நன்னிதியே! சுவாமிநா தப்பேர் வள்ளால்!
நாவலர்கள் நாவாரப் போற்றும் ஐயா!

2. இவ்வுலகிற் செய்தவத்தின் பயனா யீசன்
இணையடியை நீயெய்தி யின்ப மானாய்

இவ்வுலகில் நின்னைப்போல் உண்மை யாக
இறைபணியை யறிவிப்பா ரிலையே யென்ற
இவ்வுலகி லுள்ளோர்கள் வாட்ட நீங்க
இன்னுஞ்சின் னாளேனு மித்தே கத்தோ
டிவ்வுலகி லிருந்திலையே யென்ன செய்வேம்!
இறைவனரு ளிருந்தவா றென்னே! யென்னே!

3. தேவாரத் திருமுறையைச் செப்பஞ் செய்து
தேசத்தி லுள்ளவர்க ளெவரு மென்றும்
நாவாரப் புகழும்வணம் அச்சி லேற்றி
நல்லுபகா ரம்புரிந்தாய் ஞான நூலின்
கோவான சிவஞான பாடி யத்தைக்
குற்றமறச் சோதித்துக் குறிப்புஞ் சேர்த்துப்
பாவாணர் புகழுவெழு சூத்தி ரங்கள்
பண்டைமுறைப் படிதந்து பாது காத்தாய்.

4. செந்தூரில் வித்தியா சாலை வைத்தாய்
சிதம்பரத்திற் றிருமடமுஞ் செய்து வைத்தாய்
சிந்தைதனில் மறவாது சிவனை வைத்தாய்
செந்நெறியை உலகத்திற் சிறக்க வைத்தாய்
எந்தைநட ராஜனடி யிணையை யுன்னி
யிருகரமுஞ் சென்னிமேற் குவிய வைத்தாய்
பந்தமற வூனுடலை யிங்கே நீத்தாய்
பாரதனிற் புகழுடலை யிருக்க வைத்தாய்.

5. பண்டைமுறை யெங்கேனுந் தவறக் கண்டால்
பதைபதைத்துத் துடிதுடித்துப் பயமொன் றின்
கண்டவர்கள் நடுங்குவணம் உண்மை கூறுங் [றிக்
கலங்காத நின்னுடைய வீரந் தன்னை
எண்டிசையி லுள அறிஞ ரெவரும் எத்தும்
எழிலான சொற்பொழிவை என்று காண்பேம்!
தண்டமிழ்த்தா யொருமகவை நீத்தாள் சைவத்
தந்தையுமோர் தனிமகனை நீத்தா னம்ம!

6. நின்னைப்போ லுண்மையினிற் பிறழா மேலோர்
நீணிலத்தி லரிதாகில ரிருந்தா ரேனும்
தன்னைப்போ லென்னையுமோர் பொருளா யெண்ணித்
தயையுடனே பழகுபவ ரிலையே ஐயா!
முன்னைச்செய் தவப்பயனாய் இங்கு வாழ்ந்தாய்
மூதுலகிற் செய்தவத்தால் முன்னோன் பாதம்
பின்னமறப் பற்றிநீ யென்றும் நீங்காப்
பெருமையுடன் சிவமாகி வாழ்க! வாழ்க!

பொ. முத்தைய பிள்ளை.

உ

## மதுரை மாநகரில் நடைபெற்ற
## தமிழ் ஜில்லா சநாதனிகள் மகாநாட்டில்
### எல்லோராலும் ஆமோதிக்கப்பெற்று ஏகமனதாய் நிறைவேறிய
# தீர்மானங்கள்.

---

1. பீஹார் மாகாணத்தில் உண்டான பூகம்பத்தால் வீடுவாசல்களையும் சொத்துக்களையும் இழந்து பரிதபிக்கும் சனங்களுக்கு சநாதனிகள் பூரண உதவிசெய்ய வேண்டும்.

2. சட்டசபையில் அரிபிலாஸ் சாரதாவால் கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கிற 'சாரதா சட்டம்' சநாதனிகளுடைய மதாசாரக் கொள்கைக்குப் பெரிதும் இடையூறாக விருப்பதாலும், அச்சட்டத்தால் உண்மைச் சநாதனிகளின் மனம் புண்பட்டிருப்பதாலும்ஷை சட்டத்தைத் தள்ளுபடிசெய்து முன்போல சநாதனிகள் விவாகச் சடங்குகளைச் செய்ய வேண்டுவதற்குக் கவர்ன்மெண்டார் அநுகூலஞ் செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும்

3. தீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்ய வேண்டுமெனச் சட்டஞ்செய்ய வேண்டுமென்று சட்ட சபையில் ரெங்கய்யரால் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா, சநாதனிகளாகிய இந்துக்களுடைய மதாசாரங்களுக்கும், வேதாதிசாஸ்திரங்களுக்கும், தொன்றுதொட்ட வழக்கத்திற்கும், இந்திய சக்கரவர்த்திகளாக விருந்து காலஞ்சென்ற மாக்ஷிமைதங்கிய விக்டோரியா மஹாராணியார் அவர்களும், அவரது புத்திரராகிய மாக்ஷிமைதங்கிய ஏழாவது எட்வர்டு மஹாராஜா அவர்களும், தற்போது சக்கரவர்த்தியாக இருந்து ஆட்சிபுரிந்துவரும் எட்வர்ட்டு சக்கரவர்த்தியின் புத்திரராகிய மாக்ஷிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியார் அவர்களும் செய்து கொடுத்த வாக்குறுதிகளுக்கும் விரோதமாக இருப்பதால், இந்தமசோதாவைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைச் சநாதனிகள் கேட்டுக்கொள்ளவேண்டும்.

4. மிஸ்டர் ரெங்கய்யரால் தீண்டாமையை ஒழிக்கச் சட்டஞ் செய்யவேண்டுமென்று சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கிற தீண்டாமை விலக்கு மசோதா, சநாதன இந்துக்களின் மதாச்சாரத்துக்கும், வருணாச்சிரம தர்மத்துக்கும், வேதாதி சாஸ்திரங்களுக்கும், தொன்றுதொட்டு நடைபெற்றுவந்த வழக்கத்துக்கும் விரோதமாக விருப்பதால், ஷைமசோதாவைத் தள்ளுபடிசெய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

5. சென்னையில் நடைபெற்று வருகிற 'இந்து' என்ற இங்கிலீஷ் பத்திரிகை, இந்துதர்மத்திற்கும், வருணாச்சிரம தர்மங்களுக்கும் விரோதமான விஷயங்களைப் பிரசுரித்து வருவதாலும், சநாதனிகள் அனுப்பும் சநாதனதர்ம சம்பந்தமான விஷயங்களைப் பிரசுரிக்காமல் அலட்சியஞ் செய்வதுடன், ஒருக்கால்பிரசுரித்தால் கடைசிப்பக்கத்தில் விளம்பரங்களுக்கு இடையில் சிறிய எழுத்துக்களில் உண்மைக்கு மாருகவும், சிலவிஷயங்களை மாறுபாடாகவும் பிரசுரிப்பதாலும் சநாதனிகள் அனைவரும் அப்பத்திரிகையை ஆதரித்து வாங்கிப் படிக்கக் கூடாது.

6. சநாதனிகளுக்கு அநுகூலமாகவும், சநாதன தர்மத்தைப் பாதுகாப்பதன் பொருட்டும் இப்போது சென்னையில் ஆரம்பித்து நடைபெற்றுவருகிற இங்கிலீஷ் வாரப்பத்திரிகையாகிய (Tharma rajya) 'தர்மராஜ்யா' பத்திரிகையையும், கும்பகோணத்தி லிருந்து வெளிவருகிற 'ஆரியதர்மம்' என்றதமிழ்வாரப்பத்திரிகையையும், ஐந்துலட்சரூபா மூலதனத்துடன் சென்னையில் ஓர் அச்சுயந்திரசாலையை ஸ்தாபித்து அந்த அச்சுயந்திரசாலையிலிருந்து தினப்பதிப்பாக வெளியிடவேண்டும்; ஷை அச்சுக்கூடம் ஸ்தாபித்தற்கு வேண்டிய மூலதனமாகிய ஐந்துலட்ச ரூபாவுக்கும் பங்குகள் சேர்க்கவேண்டும்; இந்தப்பங்கில் சநாதனிகள் தங்கள் சக்திக்குத் தக்கவாறு பங்குகள் எடுத்துக்கொண்டு பொருள் உதவவேண்டும்.

7. மிஸ்டர் காந்தி தற்போது கொண்டுள்ள அரிஜன இயக்கக் கொள்கை தப்பானதும், வேதாதி சாஸ்திரங்களுக்கு நேர்விருத்தமானதும், ஸநாதனிகளுடைய கொள்கைக்கு நேர் விரோதமான வகையில் அவர் பிரசாரஞ் செய்து வருவது வெறுக்கத்தக்கதும், அவர் தன்னைச் சநாதனி என்று சொல்லிக்கொள்வது பொருத்தமற்றதும் ஆதலால், அவர் சேர்த்துவரும் நிதிக்கு ஸநாதனிகள் பொருள் கொடுக்கக் கூடாது; ஷை காந்தியின் அரிஜன இயக்கக் கொள்கையை ஸநாதன இந்துக்களின் சமூகம் பலமாகக் கண்டிக்கவேண்டும்.

8. மிஸ்டர் அரிஸிங்கவர் கொண்டுவரப் போவதாகச் சொல்லப்படும் விவாஹரத்து மசோதா ஸநாதன இந்துமதக் கொள்கைக்கு நேர் விருத்தமானதும், வேதாதி சாஸ்திரக் கொள்கைகளுக்கு மாறுபட்டதும், ஸநாதனதர்மத்தை அழிக்கக்கூடியதும், தொன்றுதொட்ட வழக்கத்துக்கு மாறுபட்டதாகவுமிருப்பதால் அந்த மசோதாவை சட்டசபையில் கொண்டுவரும்படி கவர்ன்மெண்டார் அநுமதி கொடுக்கக் கூடாதென்று ஸநாதனிகள் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

9. மிஸ்டர் காந்தி விதவாவிவாகஞ் செய்வதற்கும், பஞ்சமர் என்று ஒருசாதியில்லை என்பதற்கும், வேதங்களிலும், ஸ்மிருதி



புராணங்களிலும், பகவற்கீதையிலும் ஆதாரமிருப்பதாகப் பத்திரிகைகளில் எழுதுவதுடன், பிரசங்கமுஞ் செய்து வருவதாலும் இவை விஷயமாகப் பல மடாதிபதிகளும் வித்வான்களும் தர்க்கத்துக்கு அழைத்தகாலங்களில் வெறுஞ் சாக்குப்போக்குகள் சொல்லி மறைந்துவிட்டுப் பின்னரும் மேற்கண்டவாறு பத்திரிகைகளில் எழுதுவதுடன் பிரசங்கமுஞ் செய்துவருவதால் ஷை காந்தியைக் கூடியசீக்கிரம் பஹிரங்கமாகச் சாஸ்திர சம்பந்தமாகத் தர்க்கத்துக்கு அழைக்கவேண்டும்.

10. சநாதன தர்மத்துக்கு உழைத்து வருகிற பத்திரிகைகளை சநாதனிகள் பட்சமுடன் ஆதரித்து அப் பத்திரிகைகளுக்கு உதவி செய்யவேண்டும்.

11. சில ஆலயங்களில் அந்நிய மதஸ்தர்கள் துவஜஸ்தம்பம் வரையிலும் செல்லுகிற வழக்கமிருந்து வருகிறது. இவ் வழக்கம் சாஸ்திரத்துக்கு விரோதமானதாதலால், அதைத் தடுக்க வேண்டிய என்ன முயற்சி செய்வேண்டுமோ அம்முயற்சியைச் செய்யவேண்டும்.

---

# காந்தியும் கணக்கப் பிள்ளையும்.

காந்தி தேவகோட்டைக்கு வந்தபோது, நாட்டார்களுக்கு அரிசன விஷயமாய் உபதேசிக்கவேண்டுமென வக்கீல்களான திரு. முகுந்தராஜ ஐயங்கார், எ. ரெங்கசாமி ஐயங்கார் ஆகியவர்களிடங் கூற, அவர்கள் நாட்டார்களைக் கூடச்செய்தார்கள். நாட்டார்கள் காந்தியுடன் சம்பாஷிக்க ஏறக்குறைய 60 வயதுள்ள தங்கள் கணக்கப்பிள்ளை யாகிய திரு. சுப்பிரமணியபிள்ளையவர்களை அக்கூட்டத் தலைவராகக் கொண்டார்கள். காந்தி உயரவும், வக்கீல்கள் அதற்குச் சிறிது தாழ்வுமான ஆசனத் தமர்ந்தார்கள். அப்போது காந்திக்கும் அக் கணக்கப் பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை யாவது:— .

**காந்தி:** அரிசனங்களைச் சமத்துவமாகப் பாவித்து நடத்தவேண்டும்.

**கணக்கப்பிள்ளை:** மகாத்மாவே! சற்றுக்கவனித்துப் பேசுங்கள். இந்த இடத்திலேயே சமத்துவமில்லையே. தாங்கள் உயரமும், வக்கீல்மார்கள் சிறிது தாழ்வுமான ஆசனங்களிலும், நாங்கள் நின்றுகொண்டும் இருக்கிறோமே. இவ்விடத்திலேயேசமத்துவ மில்லாதபோது, ஊர்ப்புறத்துள்ளவர்களும், எங்களைக்கண்டால் தூர விலகுகிறவர்களுமாகிய பள்ளர் பறையர்களுக்கும் எங்களுக்கும் எப்படி சமத்துவம் சித்திக்கும்? கூர்ந்து நோக்குங்கள்.

**கா:** அவர்களோடு ஒன்ருக வேண்டா. எல்லார்க்கும் ஒன்ருன சுவாமி கோயிலுள் அவர்களை விடக்கூடாதா? அவர்களும் வழிபட்டு நன்மைபெற வேண்டியவர்களன்ருே?

கண: என்ன சொன்னீர்கள்? சுவாமி ஒன்று? முற்றத்துறந்த முனிவர்க்குச் சுவாமி ஒன்றுதான். உலகப்பற்று ஒருசிறிதுமொழியாது, பணப்பேயாற் பிடியுண்டு ஊரூராய்ப் பறந்து திரியும் எமக்கு எப்படி ஒன்றாகும். இன்னொருமுறை அப்படி இசைக்காதீர்கள்.

கா: சுயமரியாதை யின்றி, ஒருவர்க் கொருவர் அடிமையா யிருக்கலாமா?

கண: சுயமரியாதை என்னும் சொற்குப் பொருள், எல்லாரும் ஒன்றாயிருந்து உண்ண வேண்டுமென்பதா? தத்தம் சாதியாசாரம் வழுவாது நடப்பது சுயமரியாதையா? வண்ணான் வேலையை அம்பட்டனும், அம்பட்டன் வேலையைக் கம்மாளனும், கம்மாளன் வேலையைப் பறையனும், பறையன் வேலையைப் பிறரும் பார்ப்பது சுயமரியாதையா? யோசித்துப் பேசுங்கள்.

கா: எல்லாருடம்பும் குருதி எலும்பு முதலிய எழுதாதுக்களாற் கூடியதே. அவ்வாறிருக்க, அரிசனங்கள் மாத்திரம் எப்படித் தாழ்ந்தவர்களாவார்கள்?

கண: ஐயோ! பாவம்!! நம் உடலுறுப்புக்கள் யாவும் எலும்பு முதலியவற்றாலானவையாயினும், ஒருறுப்பை யுயர்த்தியும், மற்றொன்றைத் தாழ்த்தியும் கொள்வானேன்? ஒருறுப்பின் றொழில் மற்றொன்றுக்கியலுமா? கால் செய்கிற வேலையைக் கையும், கை செய்கிற வேலையைக் காலும், கண் செய்கிற வேலையைக் காதும், காது செய்கிற வேலையைக் கண்ணும் செய்ய முடியுமா?

கா: என்றாலும், அரிசனங்களைத் துன்புறுத்தாது சுகமாய் நடத்தலாகாதா?

கண: அவர்களைச் சுகமாய் நடத்தவில்லை யென்று உங்கட்கு யார் சொன்னார்? எங்கள் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டு விளைவதில் அவர்கள் கொடுத்தது தானே எங்களுக்கு? அவர்களது நன்மை தீமைகட்கு நாங்கள்தானே பணம் தருகிறோம். தீபாவலிக்கு நாங்கள் சோடியுடுக்காவிட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கிறோம். பொங்கற் பண்டிகைக்கு வேண்டியவும் அப்படியே உதவுகிறோம். அவர்களை எங்கள் பிள்ளைகளைப்போலப் பாதுகாக்கிறோம். வேண்டுமானால் அவர்களையே கேளுங்கள். சுகமே வாழும் அவர்கட்கு நீங்கள்தான் கேடு சூழ்கிறீர்கள். உங்களது துர்ப்போதனையால், அவர்கள் ஏறுமாறாக நடந்து, எங்களது உதவியற்றுக் கஞ்சிக்குக் காற்றாய்ப்பறக்கும்படி உபதேசிக்க நீங்கள் ஊர்தோறும் உழன்று திரிகிறீர்கள்.

இவற்றைக் கேட்ட காந்தி வாய் திறவாது மேலுங்கீழும் விழித்தார். கணக்கப்பிள்ளை 'மகானே! இன்னும் வேண்டியவற்றைக் கேளுங்கள். ஏற்றபதில் கூறுகிறேன்.' என்றார். அதுகேட்ட காந்தி, 'நான் தோல்வியடைந்தேன்.' என்றார். சுப்பிரமணிய விள்ளை நன்றாய்ச் சொல்லுங்கள் என, காந்தி 'நான் முக்காலுந் தோற்றேன்' என்றார். நாட்டார்கள் நகைசெய்து கலைந்தார்கள். காந்தி நாணமுற்று எழுந்து நடந்துவிட்டார்.

(பா—மி)

---

# காந்தியின் கபடநாடகத் தன்மை

(உலகத்தை ஏமாற்றிப் பணம் பறிக்கும் உபதேச முறை.)

மூடஜனங்களே! விக்ரஹத்தில் என்ன இருக்கிறது? அதை யேன் வணங்குகிறீர்கள்? கல்லில் தெய்வமிருப்பதாக எனக்கு நம்பிக்கையில்லை யென்று உபதேசஞ் செய்கிறார்.

விக்ரஹத்தில் ஒன்றுமில்லை யென்றும், விக்ரஹம் கல்லால்செய்யப்பட்டதென்றும், கல்லால்செய்யப்பட்ட விக்ரஹத்தில்தெய்வமிருப்பதாகத் தனக்கு நம்பிக்கையில்லையென்றும்சொல்லுகிறார். இவ்வாறு சொல்லும் காந்தியைப் பலர்மகான் என்கிறார்கள். காந்தி ஒரு மகானாகவிருந்தால் அவருக்கு இந்தக் குதர்க்கப்புத்தி தோன்றியிருக்கமாட்டாது. நாம் விக்ரஹத்தில் தெய்வமில்லையென்று சொன்னால் அதைச் சனங்கள் நம்புவார்களா? விக்ரஹத்தில் தெய்வசாநித்யம் இல்லாவிட்டால் பெரிய ஆலயங்களைக் கட்டி விசேஷமான பூஜைகளும், தேர்த் திருவிழாக்களும் நடைபெறுமா? சுவாமி விக்ரஹங்களுக்கு லட்சங்கணக்கான நகைகளும், வெள்ளியாலும், தங்கங்களாலும் வாகனங்களும் செய்து வைத்திருப்பார்களா? சுதேச மன்னர்கள் பலரும் விக்ரஹங்களுக்கு விசேஷமான ஆலயங்கள் கட்டி வைத்து பூஜாதிகாரியங்களுக்கு சர்வமானியங்களும் விட்டிருக்கிறார்களே? இப்போதுள்ள சுதேச மன்னர்களும் விக்ரஹ ஆராதனைகளைப் போற்றி வருகின்றார்களே? இது விஷயத்தில் நாம் ஆலோசித்துத்தான் பேசவேண்டும் என்ற யோசனை சிறிதுமின்றி, மூடஜனங்களே! விக்ரஹத்தில் தெய்வமில்லை யென்று சொல்லுவது எல்வளவு தூரம் தப்பான காரியம் என்பதைஅறிஞர்கள் ஆலோசிக்கவேண்டும். 1929-ம் வருஷ முதல் இவ்வாறு விக்ரஹத்தில் தெய்வமில்லை யென்றும், ஆலயங்களை இடித்து ஆஸ்பத்திரிகளும், பள்ளிக்கூடங்களும் கட்டவேண்டுமென்றும் பிரசாரஞ் செய்துவந்த காந்தி, 1932-ம் வருஷம் மே மாதமுதல் பள்ளர் பறையர்களை ஆலயத்தினுள் சுவாமி தரிசனத்துக்கு விடவேண்டுமென்று உபதேசஞ் செய்து வருகிறார். 1929-ம் வருஷமுதல் 1932 ஏப்ரல் மீ வரையிலும் காந்திக்கு இருந்துவந்த அறிவு, அதற்குப் பின் எங்கே போய்விட்டது? மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் முலிய மஹா க்ஷேத்திரங்களுக்கெல்லாம் போன காந்தி, அந்த க்ஷேத்திரங்களிலுள்ள ஆலயங்களுக்குப் போனாரா? அரிசனங்களில் ஒருவராகத் தன்னைச் சொல்லிக்கொள்ளும் காந்தியே ஆலயத்துக்குள் போகாதபோது மற்ற அரிசனங்கள் ஆலயத்துக்குள் போவதற்கு என்ன அவசியம் வந்தது என்பதைப்பொது ஜனங்கள் ஆலோசிக்கவேண்டும். பொருத்தமற்ற விஷயங்களைச் சொல்லிப் பொது ஜனங்களை ஒற்றுமையுடன் வாழவொட்டாது கலகத்துக்குள்ளாக்கிவரும் காந்திதான் மகாத்மாவாம். நல்ல மகாத்மா. இந்தச் சோளமா யாருக்கு வேண்டும்? (பா—மி)

---

உ

# மதிப்புரை மஞ்சரி.

## மண்ணியல் சிறுதேர்.

மகிபாலப்பதி இருமொழிப் பெரும்புலவர் என எண்டிசை புகழும் பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள், புவிக்கரசும் கவிக்கரசும் ஆகிய சூத்திரகன் என்பவரால் ஒன்பான் சுவைகட்கும் உறையுளாய்—நாடகக் காப்பியங்கட்கு நாயகமாய் வடமொழியில் யாக்கப்பெற்றுள்ள 'மிருச்சகடிகம்' என்பதைத் தண்டமிழின் மொழி பெயர்த்தது. மறையவர் மரபிற் றோன்றி வாணிகத் தொழிலை மேற்கொண்டு வளம்பல படைத்து, இரப்போர் கவிஞர் இசைவல்லோர் ஆதிய பலர்க்கும் வரையாது வழங்கி யிளமையிலே வறுமையுற்று வாடிய சாருதத்தன், கணிகையர் குலத்திற் பிறந்து அக் குலவொழுக்கத்தைக் கடிந்து கற்பியலைக் கடைப்பிடித்தொழுகிய வசந்தசேனையின் காதலிற் கட்டுண்டு அவளைக் கலந்து, தென்புல மாதிய ஐம்புல மோம்பி இல்லியல் வழாது இன்பந் துய்த்த வரலாற்று முறையை நாடக யாப்பில் நயமுற வரையப்பெற்றது. வறுமையிற் செம்மை, அடைக்கலங் காத்தல், அண்டினோரை ஆதரித்தல், உயிரையும் நட்புக்குதவல், உயிரோம்பல், வினைப்பயனை வெருமை, இரப்போர்க்கீதல், பெருமைக்கும் சிறுமைக்கும் கருமமே கட்டளைக்கல், கற்பின் பொற்பு, களவு சூது காமங் கடிதல், செய்ந்நன்றி யறிதல், தெய்வங் கொள்கை ஆதிய அருளறங்கள் பலவும் அங்கைக் கனியென அறிவுறுக்குந் திறத்தது. முதனூலொடு முற்றும் முரணுறாது, அதன் சாயையோ என அமைந்து, இழுமென்னோசை கெழுமிய விழுமிய மொழிகளா னியன்ற செழுமையுறுஞ் செய்யுட்களை யிடையிடையிட்ட செந்தமிழுரைநடை யுடைய இது, பாலெனவெளிருதா கனியெனச்சிதருதா தேனெனக்குழருதா புலவர்க்கு விருந்தெனப் பொருந்திய தெள்ளமுதத் திரளனைய சிறப்புடையதாகும். இந்நூன்முகத் தமைத்துள்ள அகவற்பாவால் நூற்பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைத்தும், அவ்வவ் வங்கங்களின் அடிக்குறிப்பால் அவ்வவற்றின் பொருளைத் தொகுத்துரைத்தும், குறிப்பிற் பொருடரும் தொடர்களையும் பிறவற்றையும் அவ்வப்பக்கத்தடிக்குறிப்பால் விளக்கியும் இருப்பது, படிப்பார்க்கு இந்நூற்பொருள் எளிதிலுணர மிக்க பயனுடைத்தாகும். இதன் சிறப்புப்பாயிரம் அணிந்துரை ஆராய்ச்சிமதிப்புரை யாகியவை, பண்டிதமணியவர்களின் இருமொழிப் புலமைத்திறனும், அதர்ப்பட மொழிபெயர்க்கும் ஆற்றலும், உரைநடையொடு செய்யுணடை யொருங்கமைந்த ஒண்மையும் பிறவும் உய்த்துணர்தற் குதவியா யொளிர்கின்றன. நாடகத் தமிழியல் அருகிவழங்கும் இந்நாளில், இத்தகு தமிழ்த்தொண்டு நந்நாட்டுக் கின்றியமையா ததலின், இவ் வரும்பணி



புரிந்த பண்டிதமணி யவர்கட்கும், இதனைச் சீரிய முறையி லச்சிடுவித்து வெளியிட்ட மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையார்க்கும் தமிழுலகம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையதாகும்.

இதன்விலை: காலிக்கோ பயிண்டு ரூ. 2-4-0; ராப்பர் பயிண்டு ரூ. 2-0-0. கிடைக்குமிடம்:—தலைவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி. Po. (புதுக்கோட்டைச் சமஸ்தானம்)

## மயூரகிரி உலா.

கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாரால் இயற்றப்பெற்றது. மயூரகிரி என்னும் குன்றக்குடிக் குமரவேளின் றிருவுலாத் திறத்தைக் கற்பனைமிக்க சொற்பெருக்காற் றொடுக்கப்பெற்றது. மகிபாலப்பதி பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார், மகாவித்துவ சிரோமணி திரு. வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார் முதலிய பல விற்பனர்களின் சிறப்புப்பாயிரங்களை முகத்திற் றிலகமெனக் கொண்டு திகழும் சிறப்புடையது. இதன்விலை அணா 2.

## திருஞான சம்பந்தர் இரட்டைமணி மாலை.

இதுவும் ஷெ இராமசுப்பிரமணியன் செட்டியாரால் யாக்கப்பெற்றது. வெம்பந்தம் நீக்கியருளும் எமது சம்பந்தப் பெருமானைப் போற்றித் துதிக்கு முகத்தான் வெண்பா கட்டளைக் கலித்துறை ஆகிய இருவகைப் பாக்களால் அந்தாதித் தொடையாற் புனையப்பெற்ற இருபது பாக்களை யுடையது. செய்யுட்களெல்லாம் சொற்சுவை சான்ற செழுமையுடையவாய்த் திகழ்கின்றன. ஆக்கியோர் தமது இளமைப் பருவத்திலேயே விரிவுரையாற்றல் கட்டுரை வரைதலுடன் செய்யுளியற்றுந் திறனையும் மேற்கொண் டொழுகல், செந்தமிழ்ப்புலமை வளர்தற்குச் சிறந்தசாதனமாகும் என்பது எமது கருத்து.

## பவ வர்ஷ வாக்கிய பஞ்சாங்கம்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சம்ஸ்கிருத திராவிட பண்டிதரும் சோதிடகணித சித்தாந்தியும் வித்தியா விருத்தித் தருமகருத்தரும் ஆகிய பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள் அநுமதிப்படி அவரது சகோதரரின் புத்திரராகிய பிரமஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரியா ரவர்களாற் கணிக்கப்பெற்றது. சோதிடாங்கங்கள் பலவற்றையும் தன்னுட்கொண்டு, திதிமுதலிய பஞ்சாங்க நிர்ணயஞ் செவ்வனஞ் செய்யப்பெற்று, உயர்திருநாட்கள்—நாயன்மார்களின் குருபூசை—ஆழ்வாராதியர் திருநட்சத்திரம்—இந்திய தேவாலய உற்சவவிவரங்கள் ஆதிய பலவும் விளக்கிக் காட்டும் விழுப்பமுடையதாகும். சுருக்கிக் கூறின், இப்பஞ்சாங்கம் ஒன்றைக் கொண்டே சோதிடர்களின் உதவியின்றிக் கால நிர்ணய முதலிய கணிதவகை

களை ஒவ்வொருவரும் தாமே எளிதிலறிந்து கொள்ளும் இயல்புடையவ ராவர். இதனை விலை 25-சதம். தொகையாக வாங்குபவர்களுக்குச் சகாயமுண்டு.

## தெய்திப் படங்கள்.

சென்னை:—சோல்டன் கம்பெனி, நெல்சன் கம்பெனி, நார்ட்டன் கம்பெனிகளிலிருந்து வரப்பெற்றோம். 1934-ஆம் வருடத்தின் ஆங்கிலத் தெய்திகள் பருத்த எழுத்துக்களால் பல வர்ணங்களால் பளபளப்பான கடிதங்களிற் பதிக்கப்பெற்று, ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொன்றாகப் பன்னிருதாட்களை யுடையனவாய், சுத்தம் வர்த்தக நிலையங்களின் வனங்களையும், தொழிற் றுறைகளின் திறங்களையும், விற்பனைக்குரிய பொருள்கள் கருவிகள் முதலியவற்றின் ஓவிய உருவங்களையும் தங்கட் கொண்டு ஒளிர்கின்றன. இவற்றுள், சோல்டன் கம்பெனியாருடையதில் தமிழ் மாதத் தெய்திகளும், நினைவுக்குறிக்கிடமும் அமைந்துள்ளன. எல்லாவற்றிலும் விசேடநாட்கள் விடுமுறைநாட்களுள் முக்கியமானவை குறிக்கப்பெற்றிருக்கின்றன.

டில்லி:—ராயல் இன்ஸ்டிடியூட் ஆப் இஞ்சினீயரிங்டெக்னலஜியிலிருந்து வந்துள்ளது, உயர்ந்த ஒரு பெருங்கடிதத்தில் 1934-ம் வருடத்திய ஆங்கிலத் தெய்திகளும் விடுமுறை நாட்களும் பெரிய எழுத்துக்களால் பல வர்ணங்களாற் பதிப்பிக்கப் பெற்றிருத்தலுடன், அவ்வித்தியா நிலையத்தின் நடைமுறைகள் பலவும் தன்னகத்து நன்கு விளக்கிக்கொண்டிருக்கின்றது.

பள்ளத்தூர்:—தி எலக்டிரிக்கல் ரேடியோ கிரும் மார்ட், மெடிக்கல் ஹாலிலிருந்து அனுப்பப்பெற்றுள்ளது, உயரிய வெள்ளிய ஒள்ளிய கடிதமொன்றின் நாப்பண், கட்டழகுடைய காரிகையொருத்தி, மட்டிலா மகிழ்வொடு மலர்ந்த முகங்கொடு, சுந்தர வடிவமைந்தனைத் தனது, தனைக்கரம்பற்றித் தூக்கி நோக்கும் தோற்றமுடைய ஓவிய உருவம் ஒன்றை உடையதாய், 1934-ம் வருடத்திய ஆங்கில மாதத் தெய்திகளைக் காட்டும் பன்னிரு துண்டுத்தாள்கள் பல வர்ணங்களாற் பதிக்கப் பெற்று அடிப்பக்கத்திற் றைக்கப்பெற்றதாய், தன்நிலையத்தில் விற்பனைக்குரிய பலவகையான கிராமபோன் பெட்டிகள் பிளேட்டுகள், எலக்டிரிக் கருவிகள் இங்கிலீஷ் மருந்துகள், புதுமை முதலான விசேடங்கட்குரிய புதிய மாதிரி பிஸ்கட் மிட்டாய் வகைகள், பவுண்டன் பேனா பென்சில்கள் ஆகிய பலவற்றின் விளம்பரக் குறிப்புகள் பிருமருங்கினும் இயைந்ததாய், காட்சிக்கினிய கவினுடையதாய்த் திகழ்கின்றது.

[மேற்காட்டிய மண்ணியல் சிறுதேர் முதலிய நூற்பிரதிகள், பஞ்சாங்கம், தெய்திப்படங்கள் ஆகியவற்றை எமது பார்வைக்கு இலவசமாய் அனுப்பிய நன்றி மறவா நலப்பாடுடையேம். ப—ர்]

---



### தோழி சிறைப்புறமாகத் தலைமகற்குச் செறிப்பு அறிவுறுத்தல்.

151. செங்காற் பசிய கிளிகா னிறகு செறிமயில்காள்
பங்காள் பெரியம்மை சேர்முது குன்றர் பனிவரையார்
எங்கா தலியை மறந்தா ரெனினு மியம்புறுநீர்
பொங்கா தலின் மறவா திருந்திடும் புந்தியிலே. (௧௦)

### பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தல்.

152. கூனிரும் பாலெமர் நீள்புனங் கொய்வர் குளிர்பனிக்கற்
றேன்விரும் பும்மொழி யம்முது குன்றர் செழுஞ்சிலம்பா
வான்விரும் பும்மொழி வெம்பெரு மாட்டி மலர்முகத்தை
மான்விரும் பும்புனத் தேயினிக் காண வழக்கில்லையே. (௧௧)

### பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்.

153. வெளியு முருவு முடைமுது குன்றர் வியன்சிலம்பா
கிளியு மயிலுந் தினைப்புனத் தேயினிக் கிட்டல்விடும்
அளியு முகிலு முறழ்மது வார்த்த சுரிகுழன்மேல்
அளியு முறவு மறவாம னெஞ்சி லருள்குவையே. (௧௨)

### தலைமகன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

154. நஞ்சக் குரிய களமுது குன்றர் நவில்சிலம்பில்
வெஞ்சொற் குறவர் புனங்காவ னீக்கி விரைமலரார்
மஞ்சக் குறழ்குழல் வல்லியன் னாளை மனையில்வைப்பார்
அஞ்சிப் பதைத்து மனமே மயல்கொளி னவதென்னே. (௧௩)

---

151. பெரியம்மை: இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

152. கூனிரும்பு - அரிவாள்; "கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை வாங்கி" (திருவிளை. நாட்டுச். ௨௭.) பனிக்கற்றேன் - உமாதேவியார்; பனிக் கல் - இமயமலை. வழக்கு - நியாயம்; வழங்குதலுமாம்.

153. வெளி - அருவத்திருமேனி. உரு - உருவத்திருமேனி. கிளியும் மயிலும் கிட்டுதலை விடாவிற்கும்.

பி-ம். 'தினைப்புனத் தேயினிக் கிட்டல்விட்டு'

154. மஞ்சக்கு - மேகத்தை; உருபுமயக்கம்.

பி-ம். 'மனையிருத்தில், அஞ்சிப் பதைத்து'

## கஉ. பகற்குறி யிடையீடு.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

155. பாயு மறிக்கரத் தார்முது குன்றர் பனிவரையாய்
சாயுங் குரலுடை நற்றினை கொய்யத் தமர்செறிந்தார்
ஆயும் வடிவிற் கிளிகளுஞ் சோலை யடுத்தனவால்
தாயு மடிக்கடி வந்தாள் புனத்திற் றடையறவே. (க)

பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கல்.

156. கலையிற் பரந்த புகழ்முது குன்றர் கவின்சிலம்பிற்
சிலையிற் சிறந்த நுதலாய் தினைப்புனஞ் சேர்ந்தபினுன்
முலையிற் பசலையைக் கண்டயிர்ப் போடு முகங்கறுத்தாள்
இலையிற் படுபணித் தோளரைக் காண வியல்பலவே. (உ)

இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்.

157. மணிமுத்த வாறு மருவியஞ் சாரலும் வான்பொழிலும்
அணிபெற்ற சிற்றிலு மாறும் புனமு மகமுறவின்
பணியுற்ற வார்சடை யார்முது குன்றர் பனிவரையும்
துணிவுற்று நெஞ்சம் பிரிவரி தாகிச் சுழலுறுமே. (ங)

ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்.

158. வாணற் கருள்புரி நன்முது குன்றர் வரைக்கிளிகாள்
காணற் கிறைவன் வருமெனி னன்பொடு கட்டுரைப்பீர்
பாணிற் குரிய மொழிபல கூறிய பைந்தொடியாள்
சேணிற் கரிய சிறுகுடில் சேருஞ் செயலினையே. (ச)

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

159. மணியார் மிடற்றர் திருமுது குன்றர் வரைக்கிளிகாள்
பணியார் புணர்முலைச் செவ்வாய்க் கருங்கட் பசுங்கிளிமாற்
பிணியா ரெனைப்புனத் தேயகன் றெங்குப் பெயர்ந்ததுநீர்
அணியா ரொருமொழி கூறித் தணிப்பீ ரகத்துயரே. (ரு)

155. குரல் - கதிர்.

156. இலையிற் படு பணி - இலை வடிவமாக உள்ள ஆபரணம்; "இலைமுகப் பைம்பூ ணிறை" நீதிநெறிவிளக்கம்.

157. ஆறும் - வழியும்.

158. வாணற்கு - வாணாசுரனுக்கு. பாண் - இசை. சேணில் - நெடுந்தூரத்திலுள்ள.



தலைமகன் வருங்களம் நாடி மறுகல்.

160. பங்க மிலாத பொழின்முது குன்றர் பனிவரையில்
அங்க மிலாத மதன்கணை பாய மகத்துயரைத்
தங்க விலாம லகற்றுந் திருவைத் தணந்தபுனம்
திங்க ளிலாத விராப்போ லிருந்தது சீரகன்றே. (சு)

தலைமகன் தலைமகள்வாழும்ஊர்நோக்கி மதிமயங்கல்.

161. துறவு விரும்பிப் புலனவி யாத துரிசினர்க்கும்
பிறவி யொழிக்குந் திருமுது குன்றர் பெருவரையாள்
உறவு கருதி மனமே யவளூ ருறவிரும்பல்
உறவி யமுதை யுணவா விரும்புத லொத்ததுவே. (எ)

## கங. இரவுக்குறி.

இறையோன் இருட்குறி வேண்டல்.

162. அரவின் குழையணி சீர்முது குன்ற ரணிவரைமேல்
இரவின் மலையிடை வேடனம் பாலுந் திளைத்துவந்தாற்
கரவின் மனத்துட னூரிட மீதல் கனங்குழையீர்
உரவின் றலைவ ருலகியல் பென்ன வுரைத்தனரே. (க)

பாங்கி நெறியினது அருமை சாற்றல்.

163. குருகார் மலர்த்தடஞ் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பில்
அரிகால் படமதந் தாழிப மோடு மரிநெறிக்கண்
விரிமா விருளிற் றனிவரு மாறெவன் வேலவசெவ்
வெரிகா விடியொடு கந்தாஞ் சூழ்தரு மிம்மலைக்கே. (உ)

தலைமகன் நெறியினது எளிமை கூறல்.

164. கலையாகத் தோலைப் புனைமுது குன்றர் கவின்வரையில்
முலையாகும் வெங்கரி மெல்லிடைச் சிங்கத் துடன்முரணும்

161. துரிசினர்க்கும் பிறவி ஒழித்தல்: "கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர்" (ககரு) என்பர் பின். உறவி - எறும்பு.

162. வேடனம்பால் - வேடனுடைய அம்பால்; வேளின் பாணத்தாலென்பது மற்றொரு பொருள்; வேள் - மன்மதன். ஊரிடம் - ஊர் இடம்; ஊரு இடம்; ஊரு - தொடை; சிலேடை.

163. அரி - சிங்கம். அரில் - சிறுதூறுகள். கந்தரம் - மேகம்.

நிலைகாண நெஞ்சம் வெருவுவ தன்றி நெடுவனத்திற்
கொலைகா ணரிகரி வந்தவற் றுற்பயங் கொள்ளலமே. (ங)

பாங்கி அவன்நாட்டுஅணியியல் வினாதல்.

165. செறிதழை யாது மலைமலர் யாது திருந்திழையும்
வெறிதுணர்ச் சோலையுஞ் சாந்தமும் யாவை மிகுகுரல்சேர்
மறியுறு பாணியர் சீர்முது குன்றர் மணிச்சிலம்பா
பொறியுறழ் நின்னாட் டரிவையர்க் கென்றும் புகலுதியே. (ச)

தலைவன் அவள்நாட்டுஅணியியல் வினாதல்.

166. பன்னாட்டத் திந்திரன் சூழ்முது குன்றர் பனிவரைமேல்
என்னாட் டணிகள் சொலிற்பயன் யாதிங் கியம்புமுங்கள்
பொன்னாட் டரிவைய ராடிடஞ் சந்தனம் பூண்டழையும்
முன்னாட் டவத்தால் வருபூங் கொடியீர் மொழிந்திடுமே. (ரு)

தலைமகற்குப் பாங்கி தன்நாட்டுஅணியியல் சாற்றல்.

167. பாந்தளம் பூணணி நன்முது குன்றர் பனிவரையாய்
காந்தளம் போது செறிபிண்டி மென்றழை கைமலைமுத்
தேந்திளங் கொங்கை நறுஞ்சாந் தணிந்தங் கிருளுறைந்த
பூந்துணர் மாதவிக் கீழிருந் தாடுவர் பூவையரே. (சா)

இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்.

168. போர்கொண்ட வேலற் றருமுது குன்றர் பொருப்பினர்தம்
எர்கொண்ட பூண்முலை மானனை யாய்நம் மிறையவர்தாம்
நீர்கொண்ட கொண்ட லதிர்மலைச் சார னெடுவனத்திற்
கார்கொண்ட வல்லிரு ளின்பால் வரவு கருதினரே. (எ)

---

164. கலையாகத் தோலைப் புனை. ஆடையாகத் தோலைப் புனைந்த; கலை - ஆடை; கலைமானின் ஆகத்தி லுள்ள தோலைப் புனைந்த என்றுமாம்; "உடையொன்றிற் புள்ளி யுழைத்தோலுங் கொண்டார்", "வெள்ளிபோற் புள்ளி யுழைமான்றோல் சேர்ந்த, உடை யுடையான்" தேவாரம். இடையாகிய சிங்கத்துடன். அரி கரி - சிங்கமும் யானையும்.

165. வெறி - நறுமணம்; வெறித்துணர்: தொகுத்தல் விகாரம். பொறி - திருமகள்.

166. பல் நாட்டத்து - பல கண்களையுடைய. முன்னாள் தவத்தால்.

167. காந்தள் அம் போது - காந்தட்பூவே அழகிய பூ. பிண்டி - அசோக மரம். அசோகந்தழையே எங்களுக்குத் தழை.

168. வரவு - வருதலை.



நோராது இறைவி நெஞ்சோடு கிளத்தல்.

169. பங்கந் தவிர்க்குந் திருமுது குன்றர் பனிவரையார்
நொந்தங் கிரவிற் புலிசெறி சாரலை நோக்கியன்பால்
வந்திங் குறநெஞ்ச மேநா மொருப்படின் மாநிலத்திற்
குந்தம் பொருவும் விழியார் கருத்துக் கொடுமையதே. (அ)

தலைமகள் நேர்ந்து பாங்கியோடுரைத்தல்.

170. மடைதங்கு சங்குமுத் தீனும் பணைசூழ் மணிமுதுகுன்
றிடைதங்கு முன்னவன் வெற்பிடை மாதே யிசையுநின்சொற்
றடைதங்கு சொல்லிலை யென்பா விருள்வழி சாருநர்க்குப்
புடைதங்கு வல்விலங் கேதஞ் செயாவணம் போதுகவே. (கூ)

தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைமகற்கு உரைத்தல்.

171. வேலைப் பிடித்த குமரனை யொத்திடு வேலவமால்
சோலைப் புறத்ததி ரும்முது குன்றர் சுடர்க்கிரிமேல்
சேலைப் பிடித்த மதனோ யகலத் திருந்திழைதன்
காலைப் பிடித்து மருந்தருள் பெற்றேன் கசிவகலே. (க0)

பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்தி வந்து
தாய்துயில் அறிதல்.

172. துறவிக் குலங்க டொழுமுது குன்றர் சுடர்க்கிரியில்
நறவைத் தருமலர் சேர்பொழி லின்கணிந் நள்ளிருள்வாய்
இறகிற் பெடையை யணைத்து மனமகி ழின்பொருவிப்
பறவைக் குலங்கள் குரலவி யாததென் பைந்தொடியே. (கக)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவுறுத்தல்.

173. கொந்தார் கடுக்கை முதுகுன்றர் வெற்பிற் குளிர்மயிலே
மந்தா நிலம்பூ மணங்கொண்டு வீசிய மாலையின்கண்
செந்தா மரைமலர்த் தேன்வேட்டு வந்திடு தேனையொத்து
வந்தார் நமது மனங்கொள்ளை கொண்டிடு மன்னவரே. (கஉ)

---

169. குந்தம் - வேல்.

170. வல் விலங்கு - யானை முதலிய வலிய மிருகங்கள். ஏதம் - துன்பம்.

171. மால் - மேகம். சேலை - மீனக் கொடியை. மதன் நோயகல அருளாகிய மருந்தைப் பெற்றேன். கசிவு - வருந்துதலை.

172. இன்பு ஒருவி - இன்பத்தை நீங்கி.

173. தேன் - மது, வண்டு.

பாங்கி தலைமகளைக் குறியிடத்திற் கொண்டுசேறல்,

174. செய்வேள் சிலையார் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பர்
மைவே லுறழ்விழி மானே யிரவின் வழியிருட்குக்
கைவேல் விளக்கா வருந்திவந் தாரவர்க் கண்டுவந்து
நெய்சேர் மலர்மா தவிநிழ லாட நினைந்தருளே. (கங)

பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்.

175. புல்லை யுரித்த திருமுது குன்றர் பொருப்பிடைநீள்
வில்லை முறித்த புருவத்தி னுய்செறி வெண்ணகைக்கு
முல்லை கடுத்த வெனவுறு மந்த முரணழித்தே
இல்லை பகையெனக் கொய்திவண் சார்வ னிருத்தியிங்கே. (கச)

தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படல்.

176. பந்தாடு மங்கையர் சூழ்முது குன்றர் பனிவரையார்
சிந்தா குலத்துட னிம்மலைச் சாரற் செறியிருள்வாய்
வந்தா ரென்னும் மனத்தருள் கொண்டோ மடமயிலே
செந்தா மரைமலர்க் கோயிலை நீங்கினை சேர்ந்ததுவே. (கரு)

தலைமகள் ஆற்றினது அருமை நினைந்து இரங்கல்.

177. கலையார் புகழ்முது குன்றர்தம் வெற்பிற் கணிபெயர்த்தே
அலையா றறலி னெறிகாண் பரிதா யணுகிருட்கண்
கொலையா ரரியுடன் வேங்கையுஞ் சேர்ந்த கொடுவனஞ்சூழ்
மலையார் குறிச்சியி னெவ்வாறு வந்தனை மன்னவனே. (கசா)

தலைமகன் தலைமகளைத் தேற்றல்.

178. விடந்தங்கு கண்டர் பழமலை யார்தம் வியன்சிலம்பில்
வடந்தங்கு திண்முலை மாதே நினது வரிநெடுங்கண்
இடந்தங்கு வெண்மை யுடனிருள் சேர்ந்த வியல்பிதென்னத்
தடந்தங்கு கொண்டல்கண் மின்னிருள் காட்டின சார்நெறிக்கே.(கஎ)

---

174. செய் வேள் சிலை ஆர் - செய்யின்கண் வேளின் சிலை ஆர்ந்த; செய் - வயல்; வேள் - மன்மதன்; அவன் சிலை - கரும்பு. கண்டு உவந்து. நெய் - தேன்.

175. புல் - புலி. கடுத்த - ஒத்தன; கோபித்தன வென்பது மற்றொரு பொருள். உறும்: முற்று.

177. கணி - வேங்கைமரம்; கணியைப் பெயர்த்துக் கொண்டு. அறலின் - நீர் வெள்ளத்தால்.

178. மின்னையும் இருளையும்.



புணர்தல்.

179. பங்க முழுதுந் துடைப்பார் முதுகுன்றிற் பைங்கொடியாய்
துங்க முழுதும் பெறும்பண் ணவர்க டுலங்கமுதம்
எங்கு முழுதுஞ் சுவையிலை வாயி னிடையளவே
அங்க முழுதுஞ் சுவையுள நின்கனி ரமுதே. (கஅ)

புகழ்தல்.

180. சினங்கொண்ட காலனைத் தம்மடி மைக்காச் சிதைத்தவர்நல்
அனங்கொண்ட பூந்தடஞ் சூழ்முது குன்ற ரணிவரைமேற்
கனங்கொண்ட மென்மலர்க் கூந்தலின் மாதே கவினுறுநின்
தனங்கண்ட பின்னல வோவிள நீர்குலை சாய்த்ததுவே. (ககூ)

தலைமகனைத் தலைமகள் குறிவரல் விலக்கல்.

181. இலங்கு மயிலற் பெறுமுது குன்ற ரெழில்வரையாய்
வலங்கொண் மதனன் கணையாற் கலங்கி வடமணிந்த
துலங்கு மணிமுலை யின்பத்தை மேவத் துணிவொடுநீ
விலங்கு செறியு மிருண்மலைச் சாரலின் மேவலையே. (உ0)

தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தல்.

182. தோயங் குடிகொள் சடைமுது குன்றர் சுடர்க்கிரிமேற்
பாயம் புறமு நெடுங்கூர் விழியுடைப் பைங்கொடியாய்
நேய நினதிடை வைத்தே மருங்கினி னீக்கமறு
ஆயம் படர்ந்து நினைத்தேடு முன்னங் கடைந்தருளே. (உக)

பாங்கி தலைமகளை எய்திக் கையுறை காட்டல்.

183. நீங்கரு மாதி னிடமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
கோங்கரும் பேய்க்கும் புணர்முலைச் செவ்வாய்க் கொடியிடைநற்
பூங்கரும் பொத்த சுவைச்சொல்லி நின்வார் புரிகுழற்குத்
தாங்கரும் பாரஞ் செயாதிந்த முல்லைத் தனிமலரே. (உஉ)

பாங்கி தலைமகளை இற்கொண்டு ஏகல்.

184. வாடாத சீருடை நன்முது குன்றர் மணிவரைமேல்
ஓடாத வேல்விழிச் செவ்வாய்ப் புணர்முலை யொண்டொடியாய்

---

180. தனங்...சாய்த்ததுவே: "கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலிகைக் காரிகைநின், குழல்கண்ட பின்னல்ல வோவற னீருட் குளித்ததுவே." தஞ்சை வாணன் கோவை, சு0.

182. தோயம் - நீர்; ஆகாயகங்கை.

வீடாத வன்பு நமதிடைக் கொண்டு விளங்குறுமாய்
தேடாத முன்னே யடைகுவ நாநந் திருமனைக்கே. (௨௩)

பிற்சென்று பாங்கி தலைமகனை வரவு விலக்கல்.

185. அம்பிசைந் தாருஞ் சிரமுது குன்ற ரணிவரைமேற்
கம்பிசைந் தாருங் களத்தானை யெண்ணிய காவலநீ
வம்பிசைந் தாரும் பொழிலிருள் வாரல் மரச்சிறிய
கொம்பசைந் தானு முறங்கா தெமது குறக்குடியே. (௨௪)

தலைமகன் மயங்கல்.

186. காலின் வளைமுத் துயிர்க்கு முதுகுன்றர் கார்வரைமேல்
வேலின் விளங்கிய கண்ணிவ ளன்பினின் வேறுரையை
நூலி னுடங்கிய நுண்ணிடை வார்குழ லெய்தினினீ
பாலின் விடத்தைக் கலந்தது போலப் பகர்ந்தனையே. (௨௫)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

187. விண்டிடு பூவார் தடஞ்சூழ் முதுகுன்றர் வெற்பிறைவா
மண்டிருள் கூரும் வழிபோ நினக்கு வருத்தமுற்ற
வண்டலர் தாமக் குழலாண் மனத்துயர் மாற்றுதற்குத்
தொண்டக மார்த்துன் பதிசேர்ந் தமைதனைச்சொல் லுதியே.()

புணர்ந்தவன் சேறல்.

188. பொடியே யணியுந் திருமுது குன்றர் பொருப்பிடத்தில்
துடியே புரையுஞ் சிறுநுசுப் பாய்நஞ் சுடர்ப்பசும்பொற்
கொடியே புரையுந் திருந்திழை நல்லோர் குடிகொளுமோர்
வடிவே விளக்கல வோவிருள் சேரும் வழியெனக்கே. (௨௭)

---

184. விளங்குறும் ஆய் - தாய்.

185. அம்பு - நீர். கம்பு - சங்கு. சிறிய மரக்கொம்பு. குறக்கொடி யெனவும் பாடம்; இதற்குத் தலைவி யென்று பொருள் கொள்க.

186. காலின் வளை - வாய்க்காலின்கண் உள்ள சங்கு. பாலின்...பகர்ந்தனையே: "வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்றென் மாறைவெற்பிற், றஞ்சங் கலந்தசொற் றையலும் யானுந் தனித்தனியே, நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதின், நஞ்சங் கலந்தனை யேநனை வார்குழ னன்னுதலே." தஞ்சைவாணன் கோவை, ௧௮௭.

187. நினக்கு - நின்பொருட்டு. தொண்டகம் ஆர்த்து - தொண்டகப் பறையை முழக்கி; இப்பறை குறிஞ்சி நிலத்துக்குரியது.

188. திருந்திழை வடிவே விளக்கு: "இணரொளி பரப்பிநின் றிருடு ரப்பன, திணிசுடர் நெய்யுடைத் தீவி[illegible]ணிவிளக் கல்லன மகளிர் மேனியே." கம்ப. நகரப். [illegible]

186937
SL

# செய்தித் திரட்டு.

தஞ்சை சைவசித்தாந்த இளைஞர் சங்கம்:—இதன் மூன்றுவதாண்டு விழாமாசி ௨௧உ 'சிவநேசன்' இராமசாமிசெட்டியாரவர்கள் தலைமையில், திருவையாறு வடமொழிக் கல்லூரி தமிழ்வித்துவான் வகுப்பு திரு. பொன்னுச்சாமி முதலியாரவர்கள் 'சுந்தரர் தேவாரம்' என்பதும், தஞ்சை பேதுரு உயர்தரக் கல்லூரி பௌதிக ஆசிரியர் திரு. நாராயணசாரியார் பி. எ. எல். டி. அவர்கள் 'நம் சமயப் பெருமை' என்பதும், யாழ்ப்பாணம் நாவலர் கோட்டம் திரு. கோடையிடிப் புலவர் என்னும் கனகசபாபதி பண்டிதர் அவர்கள் 'சிவத்தின் தன்மையே சைவத்தின் உண்மை' என்பதும், பேதுரு உயர்தரக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும் சங்கஸ்தாபகரும் ஆகிய திரு. பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் 'ஏன் பிறந்தேன்?' என்பதும், ஷை சங்க உறுப்பினர் நால்வர் 'ஓர் அளவளாவல்' என்பதும்பற்றி அரிய பெரிய விரிவுரைகள்நிகழ்த்த, வரவேற்பு, தமிழ்மறைமுழக்கம், வந்தனோபசாரம் ஆதிய வைபவங்களுடன் திருவருளாற் சீரும் சிறப்புமாக நிறை வேறியது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் வந்து கூடியிருந்து சித்தாந்தத்திற் பொதிந்த சிவானந்தத் தேனமுதஞ் செவிமடுத்தின்புற்றனர்.

திருமுதுகுன்றம்:—ஸ்ரீவிருத்தாம்பிகா பாலாம்பிகா சமேத விருத்தகிரீசுவரப் பெருமானுக்கு மாசி அஉ தொடங்கி ௰கூஉ வரை பிரமோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர் அ. வெங்கடாசலச் செட்டியாரவர்களின் சிரத்தையும், அவர்களுடன் மற்றும் இரு தருமபரிபாலகர்களின் ஒத்துழைப்பும் போற்றற்குரியன.

தெய்வீகன் இலவச வாசகசாலை:—வலங்கைமான், ஆண்டான் கோவிலில் தெய்வீகமலைய மன்னர் கூட்டத்தைச்சார்ந்த மாணவர் நன்னெறிக் கழகத்தினரால் மேலேகண்ட பெயருள்ள இலவச வாசகசாலையின் ஆரம்ப விழா, திரு. சாமிநாதஉடையார் தலைமையில், இவ்வூர் நரசிங்கமுனையரையர் திருவருட்கழகக் கொட்டகையில் நடந்தது. மாணவர் பலர் கடவுள் வணக்கங் கூறிய பின், திரு. சபாபதி சுப்பிரமணியம் அவர்கள் 'வாசகசாலையும் மாணவரும்' என்பதுபற்றி ஓர் சொற்பொழிவு செய்தனர். அதில் மாணவர்கள் எவ்வாறு வாசகசாலையைக் காத்து அதன் பயனைத் தாங்களும் பிறரும் அடைவது? என்பனவாதிய பலவிடயங்கள் கூறப்பட்டன. திரு. நா. நடேசஉடையார் அவர்களும் சில மாணவர்களும் பல சொற்பொழிவுகள் செய்து கூட்டத்தினரை மகிழ்வூட்டினர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்று விழா இனிது முடிவுற்றது.

புதுவை:—ஸ்ரீசிதம்பரம்பாதபூசை அம்பலத்தாடும் சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துசாமி சுவாமிகளின் முதலாவது மகா குருபூசை இன்று நடைபெறுவதாக ஷை சுவாமிகளின் பிற்றோன்றலாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுகம் வழங்கியுள்ளார்கள்.

கிட்டா:—இந் நகர்த் தெண்டாயுதபாணி திவ்யாபரணாலங்கிருதராய், வெள்ளி விமானத்தில் தங்க மயில் வாகனருடராய், அன்பர்கள் போற்றிசைப்ப மேளதாள விருதுகளுடன்மாசி ௰௭உ எழுந்தருளி, ௰அஉ மாகேசுவர பூசை யுவந்து, திருப்பவனியுடன் மகோற்சவம் கொண்டருளினர் என, தனவணிக நகரத்தார்களின் திருமுகம் விளக்குகிறது.

மகாசிவராத்திரி:—எல்லாச் சிவாலயங்களிலும் மாசி ௧௨உ கொண்டாடப் பெற்றது. திருவின்னம்பர் திருப்பிரசாதம், கும்பகோணத்திலிருந்து தேவகோட்டை திருவாரூர் ராம். திரு. அரு. சுழ. அருணாசலம் செட்டியாரவர்களாலும், திருவிடைவாய்த் திருப்பிரசாதம் தொடாச்சேரி சித்தாந்தநிலையம் உயர்திரு சச்சிதானந்த சுவாமிகளாலும் அனுப்பி வரப்பெற்றோம்.

உ

# சென்னை மாகாணத் தமிழர் மாநாடு.

உலகத்திலே வழங்கும் பல திருந்திய மொழிகளுள், தொன்றுதொட்டு இன்றுவரையும் பேச்சுவழக்கிலும் நூல்வழக்கிலும் தனது பழமையான உரு சிதைவுறாமல் நின்றுநிலவுவதாயும், அவ்வாறுள்ள தனது தொன்மையைத் தெரிவிக்கும் தொல்காப்பியமாகிய பேரிலக்கணத்தையும், திருக்குறள் முதலிய சங்க மருவிய நூல்களையும் உடையதாயும் விளங்கும் நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியைத் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்து அதனைப் பேசிவருகின்ற எவ்வகை மக்களுக்கும்; பிறநாட்டினர்க்கும் அறிவை வளர்த்தற்கேற்ற கருவியாகப் பயன்பெறச் செய்தலே இம் மாநாட்டின் முதன்மையான நோக்கமாகும்.

இப் பெருநோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இம் மாநாட்டில் சென்னை மாகாணத் தமிழர் சங்க மொன்று அமைக்கப்பெறும். அச் சங்கம் பின்வரும் அரும்பணிகளைச் செய்யும்:-

1. செந்தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கான செயல்களைச் செய்தல்.

2. செந்தமிழ்ச் சீரிய கலைகளாகிய இசைக்கலை, மருத்துவக்கலை, ஒளிநூற்கலை முதலியவற்றை வளர்த்தல்.

3. தனித்தமிழ் நூல்கள் எழுதியும், பிறமொழிகளிலுள்ள அறிவு நூல்களைத் தனித்தமிழில் மொழிபெயர்த்தும் தமிழ்மொழியை வளம்பெறச் செய்தல்.

4. மொழிபெயர்க்கப் பெறும் மேலை நாட்டு அறிவியற் சொற்களுக்கு (Scientific terms) ஏற்றசொற்களைப் பழந்தமிழ்நூல்களில் ஆய்ந்து திரட்டியும், தமிழ்ப்பகுதிகளை (Roots) அடிப்படையாகக்கொண்டு புதுச்சொற்களை ஆக்கியும் தமிழ்ச்சொற்றொகுதியை வளம்படுத்தல்.

5. தமிழ் நூல்களை ஆங்கிலம் முதலிய பிறமொழிகளில் மொழிபெயர்த்தல்.

6. நம் தமிழ் மக்களுக்குள்ளும், நமது நாட்டில் தமிழ்மக்களுக்கும் பிறமொழி மக்களுக்கும், நமது நாட்டு மக்களுக்கும் பிறநாட்டு மக்களுக்கும் அன்பையும் ஒற்றுமையையும் வளரச் செய்து உலகம் நலமடையச் செய்தல்.

இம்மாநாட்டுக்குத் தமிழ் நூற்காட்சி மன்றமும், தமிழ்ப் புலவர் மாநாடும் இருவிழிகள் என இலங்குகின்றன.

இம்மதி ௰௭உ தமிழ் நூற்காட்சி மன்றத்தைக் குமார மங்கலம் அரசர் திருவாளர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் திறந்து வைப்பார்கள். ௰௮உ 'தமிழர் மாநாடு' செந்தமிழ்ப் புரவலர் தஞ்சை திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையிலும், ௰௯உ 'தமிழ்ப்புலவர் மாநாடு' உயர்திரு: சுவாமி விபுலானந்தர் அவர்கள் தலைமையிலும் நடைபெறும். தமிழ்மக்களும் தமிழன்பர்களும் வரவும், இயன்ற உதவி புரியவும் வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. | இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, |
| வரவேற்புக்கழகத் தலைவர். | பு. சி. புன்னைவனநாதன், |
| | அமைச்சர். |

---

## "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணா 0--3--0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.